


சிறுகதை

# மஞ்சரி

34

வைகாசி 2023

பிரதம ஆசிரியர்: மு.தயாளன்


வளர்ந்த , வளரும் படைப்பாளிகளுக்கான களம்

£4.00 / 150Rs/50Rs(india)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்சுமி பிரசுராலயம்

Luxmi Publication



மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4




மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4




மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4





மு.தயாளன்
300Rs/£4





மு.தயாளன்
300Rs/£4




மு.தயாளன்
300Rs/£4




மு.தயாளன்
400Rs/£4




மு.தயாளன்
400Rs/£4



சு. ஆர்த்திகா
500Rs/£4



அலெக்ஸ் பரந்தாமன்
400Rs/£4

India 400 Rs
London £4
Can/Ame $10
Europe 10 Euro

**இலங்கையில் உள்ளவர்கள்**
Commercial bank Account No: 8370042817
**மற்றைய நாடுகளில் உள்ளவர்கள்** உங்கள் விருப்பத்தை luxmi2128@gmail.com இற்கு அனுப்பினால் payment link அனுப்பி வைக்கப்படும்.

எனது எல்லாப்புத்தகங்களும் சிறுகதை மஞ்சரிகளும்
**Amazon Kindle** இல் உள்ளன.
**www.amazon.co.uk/ebooks** இல்
**Type M.Thayalan**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தையில் வருவதே தமிழர் புத்தாண்டு

பருவ நிலைகளைக் கணிக்கவே கலண்டர்கள் உருவாகின. இயற்கை நிகழ்வுகளுக்கான நினைவூட்டலாகவே கலண்டர்களை உருவாக்கினார்கள். நெற்பயிர்களின் வளர்ச்சிக்காலம் அதை அறுவடை செய்ய வேண்டிய நேரம் ஆகியவற்றைத் தவறாது ஒழுங்காகச் செய்யவே கலண்டர்கள் தோன்றின. இதை எல்லா மனித குழுக்களும் செய்தார்கள். வானத்தில் காலம் முழுவதும் சுழன்றுவரும் சந்திரன் சூரியன் ஆகியவற்றை தங்களின் ஆரம்பக் கணிப்பாக வைத்து ஒவ்வொரு இனமும் கலண்டர்களை உருவாக்கினார்கள்.

ஆசியர் ஒருவிதமாகவும் ஐரோப்பியர் இன்னொரு விதமாகவும் கணிப்பீடுகளைச் செய்தனர். ஆசியர்கள் தை மாதத்தையே தங்கள் முதல் ஆண்டாகக் கொண்டனர். சீனர்களும் தமிழர்களும் இதனைப் பின்பற்றினர்.

ஐரோப்பியர்கள் சூரிய கலண்டர்களை உருவாக்கினார்கள். இவர்கள் ஏப்பிரலை முதலாண்டாகக் கொண்டாடினார்கள்.

ஆரியர்கள் தென் கிழக்கு ஐரோப்பியரது வழக்கத்தைத் தமதாக்கிக் கொண்டனர். ஆரியர்கள் இந்தியாவை ஆக்கிரமித்தபின்பு எல்லாவற்றையும் தங்களுக்கு இசைந்ததாக மாற்றினார்கள். தென்னிந்தியாவில் வலுக்கட்டாயமாகச் சித்திரை மாதந்தான் புத்தாண்டு என மாற்றினர். இந்தப் புகுத்தல் மலையாள கேரள கன்னட தெலுங்கு சிங்கள இனங்களிலும் மாற்றத்தை உண்டு பண்ணியது.

விளக்கமாகச் சொன்னால் சனாதன மதங்கள் பரவியிருந்த சகல பிரதேசங்களிலும் ஆரியர்கள் சித்திரையே புத்தாண்டு என்பதை நிலை நிறுத்தினார்கள்.

இந்திய இனங்கள் யாவற்றிலும் ஆரியர்கள் கை ஓங்க அவர்கள் ஆக்கிரமிக்காத சீனாவில் இன்னும் தைமாதமே புத்தாண்டு கொண்டாடப்படுகின்றது.

ஜூலிய சீசர் காலத்தில் ஐரோப்பாவில் அவர்களின் கடவுளான ஜானுஸ் என்பவரைக் குறித்து மீண்டும் அவர்களின் வருடப் பிறப்பு ஜனவரி ஆனது.

பின்வந்த போப் காலத்திலும் இது தொடர்ந்தது.

மிகமிகப் பழைமையான காலங்களில் அறுவடை காலமே புத்தாண்டு காலமாக இருந்து வந்துள்ளது.

சீனப் புத்தாண்டு ஜனவரியில் வருகின்றதுபோல தமிழர்களின் புத்தாணடும் ஜனவரியில்தான் என்பதே உண்மை. தமிழரின் கலண்டர் சந்திரனை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்டது. தை மாதமே தமிழரின் புத்தாண்டு ஆகும்.

ஆரிய கலப்பற்ற இனங்கள் தை மாதத்தையே புத்தாண்டாகக் கொண்டாடுகின்றன. பிராமணர்களின் திணித்தலை மறுத்து இனிமேல் தமிழர் புத்தாண்டாக அறுவடை நாளாகிய தை மாதத்தையே முதல் மாதமாகக் கொண்டு புத்தாண்டை தைமாதமே கொண்டாடுவோமாக.

A. IKUGAN
78. 2nd LANE
ANANDA PURI
TRINCO

மு. தயாளன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கங்கள்


பக்கம் 3
அஷ்வினி வையந்தி

பக்கம் 6
ஹம்சன் ராஜேந்திரன்

பக்கம் 14
நிவைபூர்ச் சித்திரவேல்

பக்கம் 18 - சியாமளா யோகேஸ்வரன்
பக்கம் 26 - திக்குவல்லை கமால்
பக்கம் 33 - மு.தயாளன்
பக்கம் 36 - ஷெல்லிதாசன்
பக்கம் 43 - எஸ். ஏ. கப்பார்
பக்கம் 47 - ஆனந் நீலகண்டன்
பக்கம் 48 - மு. தயாளன்



**சந்தா விபரம்:**
**Srilanka:1000Rs/Year**
Mrs Sasikala Thanabalasingam, Commercial bank, Trinco branch, 8370042817
**England** £20/Year **Den/Swiss/Ger:** 80Euro/year Can/USA/Amer: $120
Bank details: M. Natkunathayalan, Barclays, Sort code 20-37-15, A/C Number 60389307
IBAN : GB11BUKB20371560389307
SWIFTBIC BUKBGB22





பக்கம் 1
தையில் வருவதே தமிழர் புத்தாண்டு



**முதன்மை ஆசிரியர்** மு. தயாளன்
**உதவி ஆசிரியர்கள்**
வி.மைக்கல் கொலின், செல்வி த. சரண்யா, திருமதி சாரு தயாளன்
**ஒப்பு நோக்காளர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு தயாளன்
**ஆலோசகர்கள்**
Dr P.இராசையா, பேராசிரியர் செ.யோகராசா



**தொடர்பு முகவரி:**
**Sirukathai manjari, 14 Brands Road, Berkshire SL3 8QP,UK** sirukathai1@gmail.com, +447505455811
**Sirukathaimanjari 91, Barathi street, Trincomalee, Srilanka**
sirukathai1@gmail.com, +94765554649



**நன்றிக்குரியவர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு நற்குணதயாளன், திரு ரமணன் நற்குணதயாளன், செல்வி சரண்யா தனபாலசிங்கம், திரு வி. மைக்கல் கொலின், செ. யோகராசா, வணசிங்க அச்சகத்தினர்


**சிறுகதை மஞ்சரி 32**
**இன் சிறந்த இரு சிறுகதைகள்**
1. வேலியே பயிரை மேய்ந்தது- ரஜிதா அரிச்சந்திரன்
2. கிணற்றடி - கர்ணன் சின்னத்தம்பி


**அட்டை வடிவமைப்பு:**
ரமணன் நற்குணதயாளன்
**அட்டைப்படம் :** செல்வன். பவித்திரன்
**ஓவியர்கள்:** G. கைலாசநாதன் , T. சௌந்தர்


**அன்பான வேண்டுகோள்.**
*படைப்புகளுடன் உங்கள் வங்கி விபரம் அனுப்ப மறக்க வேண்டாம்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதை



அஷ்வினி வையந்தி



ஒரு கவிதாஞ்சினியாக உலகிற்கு அறிமுகமாகியுள்ள இவர் சிறுகதை உலகத்திலும் இணையில்லாவராக இயங்கி வருகிறார். திருகோணமலையைச் சேர்ந்த இவர் பெரும்பாலும் பாசப் பிரச்சினைகளைத் தன் கதைக்களமாகப் பாவித்து வருகிறார்.
திருகோணமலையைச் சேர்ந்த இவர் பெரும்பாலும் பாசப் பிரச்சினைகளைத் தன் கதைக்களமாகப் பாவித்து வருகிறார்.

வழமைபோல அன்றைக்கும் அவள் ஐந்து மணிக்கு எழும்பி விட்டாள். எழும்பியதும் தனது இரு பிள்ளைகளின் முகத்தையும் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு அவர்கள் விழித்துவிடக் கூடாது என்று மெதுவாக எழும்பி வெளியில் சென்று தனது அன்றாட வீட்டு வேலைகளை செய்யத் தொடங்கினாள். காதலித்து திருமணம் செய்து கொண்டவன் தனக்கு செய்யும் அட்டூழியங்களை ஒரு கணம் மனதில் நினைத்துக் கொண்டாள். காதலித்து ஊர் சுற்றிய நேரம் "உன்னைக் கண் கலங்க விடமாட்டேன் கண் மணியே" என உறுதி மொழி கொடுத்தவனே இன்றைக்கு அவள் சமைக்கும் சமையலிலும், அவள் செய்யும் வீட்டு வேலைகளிலும் குற்றம் கண்டுபிடித்து அவளைக் கொடுமைப் படுத்திக் கொண்டிருக்கின்றான். அவளது மனது எப்படித் தவித்துப் போகும். இத்தனை வலியிலும், வேதனையிலும் அவள் வாழத்தான் செய்கின்றாள். அவளுக்காகவா வாழ்கின்றாள்? அவளது பிள்ளைகளுக்காக அல்லவா வாழ்கின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது வீட்டுவேலைகளை முடித்துக் கொண்ட அவள் பிள்ளைகளை எழுப்பிப் பாடசாலை செல்வதற்காக அவர்களைத் தயார்படுத்திவிட்டு வயலில் கூலி வேலை செய்வதற்கான தனது பொருட்களை எடுத்துக் கொண்டு புறப்படுகின்றாள். புறப்படும் வேளையில் "அடியே பரதேசி எங்கடி போறாய்? என்னடி சமைத்து வைத்திருக் கின்றாய்?" என்ற கொடூரக் குரல் அவளது காதில் கேட்கின்றது. அதையெல்லாம் பொருட்படுத்தாமல் அவள் தனது நடையை வேகப்படுத்திக் கொண்டு செல்கின்றாள். செல்லும்போது எத்தனை கேள்விகள் அவள் மனதில் எழுகின்றது.

பரதேசி மாமியாரின் கதையைக் கேட்டுவிட்டு ஒவ்வொரு நாளும் விதவிதமாகக் கொடுமைப்படுத்தும் கணவனை நம்பிக் கழுத்தை நீட்டியது எத்தனை பிழை என்று எண்ணிக் கொண்டாள். அன்றைக்கு அவளது தாய்வீட்டில் வாங்கிய மீன்துண்டுகளை வேலிக்கு வெளியில் விசிறிவிட்டு அவளது முடியைப் பிடித்துத் "தறதற" வென இழுத்து வந்த அந்தக் கொடுமையை நினைத்துக்கொண்ட போது அவளை அறியாமலே அவள் கண்களில் இருந்து கண்ணீர்த்துளிகள் வெளிவந்து விட்டன. இதைப்போல் இன்னொரு நாள் அவள் கூலிவேலை செய்து தனது பிள்ளைகளுக்கு வாங்கி போட்ட ,ரண்டு பவுண் சங்கிலிகளை வலுக்கட்டாயமாக பறித்துக்கொண்டு தனது பரதேசி அம்மாவுக்குக் கொடுத்துவிட்டு வந்திருந்தான். அவள் கத்திக் கதறியும் அதனை அவன் அவளிடம் இருந்து பறித்துக் கொண்டு போய்விட்டான். இப்படி அந்தக் கொடூரக் காதலன் செய்த அட்டூழியங்களை மனதில் நினைத்துக் கொண்டாள். இன்னும் இன்னும் எத்தனை அட்டூழியங்களை செய்யப் போகின்றான் எனவும் நினைத்துக் கொண்ட அவள் தான் வேலை செய்யும் கூட்டாளிகளின் சலசலப்பு கேட்டு நிஜஉலகிற்கு வந்து சேர்ந்தாள்.

வேலை புரியும் வயல்காணியில் அவளுக்காக ஒதுக்கப்பட்ட நெற்கதிர்களை மாத்திரமின்றி பிறருடைய நெற்கதிர்களையும் சேர்த்து அறுவடை செய்யும் மனப்பாங்கு கொண்டவள். பெரிய நெற்கட்டுக்களைத் தலையில் சுமந்து சென்று களத்தில் போட்டுவிட்டு வரும்போது அவளது தலையில்தான் எவ்வளவு பெரிய வலி ஏற்பட்டிருக்கும். அவளது கொடூரக்காதலன் அவளுக்குப் புரியும் அட்டூழியங்கள் ஒரு பக்கம். பிள்ளைகளுக்காக அவள் எதிர் கொள்ளும் வேலைச்சுமைகள் மறுபக்கம். இத்தனை கொடுமைகளுக்குப் பின்னும் அந்தப் பெண் வாழத்தான் செய்கின்றாள். அவளது அந்தத் தைரியத்தை இந்த உலகம் ஒருநாள் கட்டாயம் பாரட்டத் தான் போகின்றது.

வேலை முடிந்து வீட்டிற்கு செல்லும் அவள் முகத்தைப் பாருங்கள். அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தில்தான் எத்தனை சோகம். இத்தனை சோகத்தோடும் அவள் தனது பிள்ளைகளின் முகத்தைக் கண்டு சிரிக்கத் தான் செய்கின்றாள். அதிலும் அந்த கடைக்குட்டி பெண் செய்யும் குறும்பு களைக் கண்டு கண்கலங்கி நிற் கின்றாள். மூத்த ஆண்பிள்ளை தாயின் வேதனை தெரிந்தவன். தாயின் துயரங்களில் பங்கெடுப்பவன். ஆனால் இளையவள் அப்படியில்லை. மிகவும் மோசக்காரி. தாயா? குழந்தையா? என்ற போராட்டத்தில் தாயையும், தன்னையும் காப்பாற்றிக்கொண்டு பிறந்த குறும்புக்காரி. அவளால்தான் அவளது தாய்க்கு விடிவு கிடைக்கும் என அவளது தாய் பெரிதும் நம்பிக்கை கொண்டிருந்தாள். அந்தளவிற்குப் புத்தியும், அசட்டுத் தைரியமும் மிக்க குறும்புக் காரியாக இருந்தாள் அந்தப்பெண்.

இவ்வாறு வேலை முடித்துவிட்டுத் தனது பிள்ளைகளுடன் விளையாடிக் கொண்டிருந்த அவளை அந்தக் கொடூரக் காதலன் கண்டதும் பாய்ந்து விழுந்து வந்து அவளது முடியைப் பற்றி இழுத்து "ஏனடி காலையில கதைக்க கதைக்க பேசாமல் ஓடினாய். உனக்கு அத்தனை தைரியமா? இரு உனக்கு என்ன செய்கின்றேன் பார்." எனக் கத்திக் கொண்டே அவளது வயிற்றில் ஒரு உதை விட்டான். பாவம் அந்தப்பெண் "அம்மா" என அடிவயிற்றைப் பிடித்துக்கொண்டு கத்திக்கொண்டிருந்தாள். அவள் மட்டுமா அழுதாள்? கவலை மறந்து விளையாடிக் கொண்டிருந்த அவளது இரு பிள்ளைகளும் அவளது தாயை அணைத்துக் கொண்டு அழத்தான் செய்தார்கள்.

அந்தக்கொடூரன் அத்தோடு விட்டானா? அவளையும், அவளது பிள்ளைகளையும் குடிசையில் வைத்துக் கதவைச் சாத்திவிட்டுத் தனது தங்கையிடம் மண்ணெண்ணெய் வாங்கி குடிசையை பற்றவைத்துவிட்டான்.

அவள் வீரமான பெண். அந்த நெருப்புக் குடிசைக்குள் இருந்து எப்படியோ தப்பி வந்துவிட்டாள். வந்ததும் உடனடியாகத் தனது தாயைத் தேடிச் சென்றுவிட்டாள். பாவம் அந்தப் பெண். அவள் அடைந்த மனநிலையை எப்படி எழுத்தில் வார்ப்பது? இப்படியான கொடூர அரக்கனையும், அவளைப் பெற்றவளையும் என்னவென்று சொல்வது? இவர்கள் மனிதகுலத்தில்தானா பிறந்தார்கள்? இவர்களின் கையில் சிக்கிய அந்த அப்பாவிப் பெண்ணுடைய வாழ்க்கையைப் பற்றி எழுதினால் எழுதிக் கொண்டே போகலாம். அதனால் இந்தக் கதையை இத்தோடு முடித்துக் கொள்வோம். கதை என்றா சொன்னேன்? இந்தக் கொடூர அட்டூழியத்தை முடித்துக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹெம்லன் ராஜேந்திரன்.



வித்தியாசமான
கருக்களைத் துணிந்து
கையிலெடுக்கும் நல்லதொரு
சிறுகதை எழுத்தாளர்.
சரளமான எழுத்து
நடை கொண்டவர்.
பாத்திரங்களாகவே தான்
மாறி அவற்றை உயிரோடு
எம் முன் தவழவிடும் உத்தி
தெரிந்தவர். சிறுகதை
மஞ்சரியில் பல கதைகளை
எழுதியுள்ளார். விரைவில்
சிறுகதைத் தொகுப்பு
ஒன்று போடுவதற்கான
முயற்சியிலும்
இறங்கியுள்ளார்.


# தடுப்புச் சுவர்

காலை வேளை, அனைவரும் திருமண வைபவத்திற்குச் சென்றிருக்க, ராமன், அவர்களின் அலுவலக வேலைத் தடுப்புச் சுவர்ல நிமித்தம் காரணமாக, வீட்டில் தனிமையில் விடப்பட்டுள்ளதால், இந்த நேரத்தில் தன்னுடைய புத்தக அலுமாரியை சுத்தம் செய்ய முனைந்தார். சுத்தம் செய்து கொண்டிருந்தபோது, அந்தப் புகைப்படம் அடங்கிய பத்திரிகை பல வருடம் கழித்து கண்ணில் தென்பட்டது. தான் செய்து கொண்டிருந்த வேலையையும் பாதியில் விட்டுவிட்டு சுவரோடு சாய்ந்து கீழே உக்கார்ந்து அந்த இரத்தம் கலந்த நினைவுகளை மீட்க்கலானார்.

வருடம் 2023

"கெதர கவுத இன்னே? தொற அரின்ன.." (வீட்டில் யார் இருக்கின்றீகள் கதவை திறவுங்கள்..) என்ற உரத்த குரலில், அந்த அதிகாலையில் கதவை அழுத்தமாகத் தட்டும் சத்தம் கேட்டு மிரண்டு போன ராமன் கதவை திறந்தார்.

"ஒபட அவசய கவுத ? எய் மே வெலாவட்ட எவில்லா இன்னே ?" உங்களுக்கு யார் வேண்டும் ? எதற்காக இந்த நேரத்தில் வந்துள்ளீர்கள் ? என்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமன் கேட்க, ஒரு நிமிடம் அவனை முழுதாய் பார்த்து விட்டு, வந்திருந்த அந்த நான்கு நபர்கள் ஏதும் பேசாமல், சாக்கினால் ஆன முகமூடியை வேகமாக ராமன் முகத்திற்குப் போட்டு, அவனை வெள்ளை வேன் ஒன்றில் கொண்டு சென்றுவிட்டனர்.

பெர்லந்த பகுதியில், அரசாங்கத்தால் கைவிடப்பட்ட இரண்டு மாடிக் கட்டிடம். இப்போதைய ஹிட்லரின் இன்னொரு சிறு, வதை முகாமாக இலங்கையில் உருவெடுத்துள்ளது. இது அரசாங்கத்தின் தவறுகளைச் சுட்டிக்காட்டி எதிர்ப்போருக்கான சவக்குழி. அவ்வாறான இடத்திற்குத் தான் ராமன் அழைத்து வரப்பட்டார்.

முகமூடியைக் கழற்றி விட்டு, " அப்பி ஹித்தனவா அப்பி ஓயாவ மெதநட்ட கெனவா எய் கியலா..ஓயாட தென் தேரனவா ஹெத்தி கியலா.." (உன்ன இங்க கூட்டிட்டு வந்தது எதுக்குன்னு இப்போ புரிஞ்சு இருக்கும்ன்னு நெனைக்குறோம்.) என்று அந்த நான்கு நபர்களின் தலைவன் போல் இருந்தவன் கூறலானான்.

குறுகிய நேரத்தில், விடயத்தைப் புரிந்து கொண்ட ராமன், இனி நடக்க விருப்பதை எண்ணி மனதையும் உடலையும் திடப்படுத்தி கொண்டான். மேலும், ராமனின் கைகளை இறுக்கமாக ஒரு தூணில் அருகே உக்கார வைத்து கட்டிவிட்டு அவர்கள் சென்று விட்டார்கள். அதே சமயம், கந்தல் துணியை போல, ஒரு நபரை அடித்து இரத்தம் சொட்டச் சொட்ட ராமன் அருகில் வந்து கிடத்தி விட்டு, அவர்களுக்குளே "இனி இந்த ஊடகவியலாள நாய்க்கு உண்மைகளைப் பேச என்ன, மூத்திரம் கூட அடிக்க முடியாது போலத் தெரிகிறது." என்று ஏளனச் சிரிப்போடு கூறிச் சென்று விட்டார்கள். ராமன் சிறிது நேரம் அவரையே வெறிக்க வெறிக்கப் பார்த்து கொண்டிருந்தார். சற்று நேரத்தில் அவரே ஒரு பக்கக் கண்ணை மட்டுமே தற்போதைக்கு திறக்க முடியும் என்பதால் இலேசாக திறந்து மெதுவாக எழுந்து சாய்ந்து தூணோடு உட்காந்தார்.

"எய் ஓயாவ மேட கெனாவே ?" (எதற்காக உங்களை இங்கு கொண்டு வந்தார்கள்)என்று அந்த ஊடகவியலாளர் மிகவும் இலேசான தொனியில் ராமனை வினவினார்.

ராமன், "உங்களுக்கு தமிழ் புரியுமா.. இல்ல சிங்களத்தில பேசுறதுனாலும் சரி.." என்று கூறினார்.

ஊடகவியலாளர், "மீடியாக்காரனா இருந்துட்டு மொழி தெரியலனா தான் தப்பு..மொழிய வச்சு பண்ற அரசியல் தான் இங்க பாதிப் பேர் சக மனுஷனோட பேசவே யோசிக்க வைக்குது..நீங்க பேசுங்க, நான் புரிஞ்சுப்பேன்." என்று சிரித்துக்கொண்டே பதில் கூறினார்.

""இந்த அரசாங்கம் எதிர்க்குற கட்சிக்கு முன்ன நின்னு ஆதரவுதார தீவிர ஆதரவாளனா என்ன அடையாளம் கண்டு விட்டாங்க என்னவோ.. இல் லனா, வேற யாருக்கு என்ன இங்க கொண்டு வந்து என்ன இலாபம்.!" என்று தன் மரணம் அறிந்தவர் போல சிரித்து கொண்டே பதில் கூறினார்.

ஊடகவியலாளர், " ஒப வமம்சிக பக்ஷயகட அயத்த ?" (நீங்க இடதுசாரி கட்சிய சேர்ந்தவரா?) என்று கேட்க, ராமன் பேசலானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் எந்த கட்சியையும் இல்லனா கொள்கையையும் ஆழமா ஆதரிக்குறவன் இல்ல. முடிஞ்ச வர மாற்றம் ஒன்னுக்காக போராடுற வர்க்கம். ஆனா, எது மூலம் அது கெடைக்குமோ, அதுல தப்பு இருந்தா அத அடியோடு புடுங்கி எறிய தயங்காத வர்க்கமும் கூட.."

பேசிக்கொண்டிருக்கையில், தூரத்தில் ஒரு வயதான நபரின் கழுத்தை நெறித்து படுகொலை செய்து அந்த சடலத்தை வேனில், சாக்கு ஒன்றில் சுற்றி எடுத்துச் செல்வதை பார்த்து கொண்டிருந்தார்கள்.

ஊடகவியலாளர், " பார்த்திங்களா... உங்கள மாதிரி மாற்றம் எதிர்பார்த்து மக்களால தேர்ந்தெடுக்கப்பட்ட சர்வாதிகார அரசாங்கம் பண்றது அவங்கதான்னு தெரியும் ஆனா ஆதாரம் இல்ல.. அப்படி கிடைச்சாலும் ஆதாரம் வச்சு இருக்கவங்க இப்படி தான் காணாம போயிருவாங்க.." என்று தமிழில் கூறினார்.

சட்டென்று ராமன், அவரைப் பார்த்து " ஒவுன் ஒபட மெச்சர வத ஹிம்சா கரன்னே?" (அவங்க ஏன் உங்கள இவ்வளவு சித்திரவத செய்றாங்க?) என்று சிங்களத்தில் கேட்கலானார்.

புன்சிரிப்போடு ஊடகவியலாளர், "ஏக்க.. இல்ல நான் தமிழ்ல சொல்லுறேன்.. லங்காவின் குரல், அப்படிங்கற பத்திரிகையின் ஊடகவியலாளன் நான். சமீப காலமாக இந்த அரசாங்கத்தின் குறைகள ஆதாரபூர்வமாக நான் தேடி எடுத்து அம்பலப்படுத்த ஆரம்பிச்சுட்டு இருந்தேன். அது அரசாங்கத்துக்கு ஆபத்தா போயிரும்ன்னு, மூணு நாளுக்கு மொதல்ல இதே அரசாங்கம் தொடர்பான ஆதராங்கள சேகரிக்க போகும் வழியுல தூக்கிட்டு வந்துட்டாங்க.. ஆனா நான் இங்கயும் எப்படி சரி தப்பிச்சு, மறைச்சு வச்சு இருக்க இந்த சவக்குழிய பத்தியும் பேசுவேன்!!!"

ராமன், இந்நேரம், வீட்டிற்கு வந்த என் மனைவியும், பசங்களும் நான் ஏதோ கட்சி வேலையா போய்ட்டேன் வருவேன்னு நெனைப்பாங்க.. ஆனா நான் இனி எப்பவும் வரப்போறது இல்லன்னு அவங்களுக்கு தெரியாது.. பாவம்! உங்கள மாதிரி துப்பு தொலக்க தெரியாது.. ஆனா அரசியல் சார்ந்த புத்தகங்கள் மூலமா நெறைய தெரிஞ்சுக்கிட்டேன். ஆனா இப்போ எதுவுமே கை குடுக்க போறது இல்ல என்று கவலை மிகுந்த ஆதங்கத்துடன் தன் நிலை மறந்து தமிழில் கூறிக்கொண்டிருந்தார்.

ஒரு சில நிமிடங்கள் கழித்து, ராமனின், கூற்று ஊடகவியலாளருக்குப் புரிந்தது.

சட்டென்று இவர்கள் இருக்கும் திசையில் இருந்து மிக அருகில் ஒருவர் வாந்தி எடுத்து கொண்டிருப்பதை பார்த்தனர். தண்ணீர் தேடி அலைந்து இல்லாத காரணத்தினால் கடைசியாக அவருடைய சிறுநீரை குடித்து விட்டு, தான் இருந்த இடத்தை நோக்கி தட்டுத்தடுமாறிச் சென்று கொண்டிருந்தார்.

இதனைப் பார்த்த ராமனுக்கோ குமட்டலே வந்துவிட்டது. ஊடகவியலாளர், "fucking baslards " என்று ஆங்கிலத்தில் கத்தத் தொடங்கிவிட்டார். விடயம் புரியாத, ராமனோ என்ன பிரச்சனை என்று கேட்பதற்கு யோசித்து விட்டு, எதுவாகினும் சரி என்று கேட்டார்.

ராமன், " அய் ஒச்சற தராவென்னே..? " (எதுக்கு இவ்வளோ கோபப்படுறிங்க?)

ஊடகவியலாளர், " மெத்தன இன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாஹர நிலதாரிலட்ட எளியட்ட யன்னே கலத்துரக்கின் நிசா மே வகே சிறக்கருவன் ஹரஹா தமணகே ஆதிக்க சஹா நிரயாச கமா" (இங்க இருக்க ஒரு சில அதிகாரிகளுக்கு வெளியில போறது ரொம்ப கம்மிங்கறதால, தன்னோட அதீத தன்னிச்சையான காம இச்சைகள, இவங்க கைதிகளா வச்சு இருக்க ஒரு சிலவங்க மூலமா தீர்த்துக்குவாங்க.. புரியும்ன்னு நெனைக்குறேன்..)

ராமன், " எதுக்காக, இப்பிடி எல்லாம் பண்ணனும் புரியல, இல்லாதவன என்ன பண்ணாலும் எதிர்க்க மாட்டான்னு ஒரு அதிகார திமிரா.. இல்ல மிருகத்தோட கூட கம்பயர் பண்ண முடியாத வெறி புடிச்சவனுகளானு தெரியல.." என்று கூறினார்.

பேசிக்கொண்டிருக்கையில், இவர்கள் அருகில் இருவர் வந்து, ராமனை இழுத்துக் கொண்டு போய் கதிரை ஒன்றில் இருக்க செய்து விசாரணை செய்ய ஆயுத்தமானார்கள். மேலும், ராமனுக்கோ இவர்கள் எதற்கும் அஞ்சாத கூலிப்படைகள் என்பதையும் புரிந்து கொண்டார்.

" ஒபவ பற தெமலோ கியன எக அறி. ஒபலா படகினின் ஆப்பு மினிசு. ஏக்க ஹொக்கம ஹத்த அரில, கொம்யுனிஸ்ட் எகட்ட கிசிம உதவ்வக் நெத்தி பிரதிபதிட்ட ஆதரய தென்ன எக பிஸ்சு வகே நெத்தே ?" (பற தமிழன் என்பது சரியா தான் இருக்கு. பஞ்சம் பொழைக்க வந்தவங்க தானே நீங்க எல்லாம், அதெல்லாம் விட்டு கம்யூனிஸமா, மாற்றமான்னு ஒன்னுக்கும் ஒதவாத கொள்கைகள தூக்கி புடிச்சுட்டு ஆடுறது எல்லாம் பைத்தியகாரத்தனமா தெரியல) என்று இவருக்கு முன்னாடி இருக்கையில் அமர்ந்திருந்த அந்த அதிகாரி பேசினார்.

"இருக்குறவங்ககிட்டு இருந்து இல்லாத நீங்க எல்லாம் கொஞ்சம் கொஞ்சமா புடுங்கி, அவங்களுக்கு கறுப்பர்ங்கற சாயத்தையும் பூசி, உங்க மதம், உங்க இனம்ன்னு எல்லாத்தையும் உயர்த்தி புடிச்சுட்டு இப்ப வரைக்கும் ஆடுறது நீங்க தான்னு உங்களுக்கு புரியலல.." என்று ராமன் சாந்தமான தொனியில் பேசினார்.

சட்டென்று, ராமனின் இருக்கையின் பின் நின்ற ஆள், ராமன் ஏதோ தவறாக கூறிகிறான் என்பதைக் கொஞ்சம் உணர்ந்து, அவரது தலையை மேசையோடு அடிக்கவும், நிலை தடுமாறி கீழே விழுந்த ராமனை மிதித்து, அதிகாரியின் கண் அசைவிற்கு பிறகு, உதட்டில் இருந்து இரத்தம் சொட்ட மெதுவாக தலையை நிமிர்த்திக் கதிரையில் இருத்தினான்.

அதிகாரி, " மேக்கேன் பஸ்சே கட வாகன இன்ன ஓனே..நெத்தம் ஹெமதாம வகே அபே ஹத்தின் குட்டி காலா மெறனவா." (இதுக்கு அப்பறம் வாய் தொறக்காம இருக்கனும்..இல்லன்னா எப்பவும் போல எங்க கிட்ட அடிவாங்கி செத்துருவ ) என ஏளனச் சிரிப்போடு பதில் கூறினார்.

தூரத்தில் இருந்த ஊடகவியலாளர், " அனுங்கே பஹசுவ தக விக்ரிதி லெச லியவுனே மகாவம்சய யொதாகென வைரய ஹெதிகரமின் ஒப சியலுதெனாம மோடயன் பவாட பத் கரய். அதும தராமே மனுஷியவக் ஹெசரின்ன பலன்ன.." (அவங்க அவங்க சௌகரியத்துக்கு திரிச்சி எழுதுன மகாவம் சத்த வச்சு துவேஷத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்துட்டு உங்கள எல்லாம் முட்டாள் ஆக்கிட்டு இருக்கானுக. கொஞ்சமாவது மனுஷதனத்தோட நடந்துகோங்க பாருங்கடா)

இவர் சொன்னதை கேட்டு கொதித் தெழுந்த அடியாள் ஒருவன் வேகமாக ஓடி வந்து காலால் இவர் முகத்தை உதைத்து, "ஒப சிங்கலயக்கின் கியமின்.. மே ரஜய துன் வரப்பரசாதா சியல்ல அமதக உனாதா.." (சிங்களவன் எண்டு சொல்லிக்காத டா பறயனே.. இந்த அர சாங்கம் கொடுக்குற சலுகைகள் எல்லாம் மறந்து போகுதா) என்று கேட்டான்.

ஊடகவியலாளர், " இஸ்சராட்ட மொான வெய்த கியலா வெட நொவி ஏக்கேன் ஆடம்பர வென்னே ஒயலா வகே கட்டிய தமாய்.. மம நெமே!! ( அத உன்ன மாதிரி ஆளுங்க தான் பெருமையா நெனைச்சு எதிர்காலத்துல வரப்போறத நெனச்சு கவலபடாம அனுபவிக்கிறிங்க.. நான் இல்லையே!!) என்று சிரித்து கொண்டே கூறினார்.

மறுபடியும், அவரை மிதித்து, அவர் மேல் சிறுநீரையும் கழித்து விட்டு அங்கிருந்து நகர்ந்து விட்டான்.

இதெல்லாம் கண நேரமாக பார்த்து கொண்டிருந்த ராமனுக்கு பயம் வர வில்லை, மாறாகக் கோபம் வந்தது, அந்தக் கோபத்தோடு இங்கிருந்து தப்பிக்க வேண்டும் என்ற இரண்டு விதமான எண்ணங்கள் உதிர்ந்தது. சட்டென்று, அந்த அதிகாரி சிகரட்டைப் புகைத்த வண்ணம் பேசலானார்.

அதிகாரி, "ஒபத் மஹா கொம் யுனிஸ்ட்வாதியேக் பவத் ஒப கிசிம தேய கட்ட யட்டட் நொவன பவத் அப்பி ஹொாந்தின் தனிமு.. அப்பி ஒபதுமாவ மரலா பீசஎகட்ட விசிக்கருவத் காட்டவத் கிசிம கட்டியகட்ட தன்னே.. மேக்க துவன்னே ஆண்டுவனே..!" (நீயும் பெரிய கம்யூனிஸ்ட்வாதில எதுக்கும் அடிபணிய மாட்டனு நல்லாவே தெரியும்..உன்ன கொன்னு பீச் ஓரமா வீசுன கூட எவனும் எதும் கேட்கமாட்டனுக.. காரணம், இத நடத்துறதே அரசாங்கம் தான்) என பேசி எழும்ப முற்பட்ட போது ராமன் பேசலா னார்.

பொறுமை இழந்த ராமன், "அதே கம்யூனிஸ்ட் தான் டா.. யாரும் எதிர்பார்க் காத நேரம் ஒரே இராத்திரில அவ்வளோ பெரிய இராஜ்ஜியத்த, மக்கள் சரிச்சாங்க.. வழி நடத்த ஒருத்தன் இருந்தான் தான். அவன் மக்கள கொழப்பி காரியத்த சாத்திச் சானு இப்பவும் சொல்லுறாங்க தான்.. ஆனா ஒன்னு மட்டும் உண்ம ஒரு புரட்சி.. ஒரு மாற்றத்த வரலாறா உருவாக்கும்.." என தமிழில், மேசையை வேகமாக அடித்து அந்த அதிகாரி இருக்கும் திசையில் எச்சில் துப்பி பேசி முடித்தார்.

அதே சமயம், அதிகாரிக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. மறு முனையில் என்ன சொன்னார்கள், யார் என்று தெரியாது. ஆனால் பேசி முடித்த பின்னர், அதிகாரி, " தவ சத்தியேக்கின் மெத்திவரணைய பெவத்வென்ன பவ ஸ்திரியாய். ஏக்க நிசா மெத்தன கினும் இவர கரன்ன கிவ்வா.." (இன்னும் ஒரு வாரத்துல, தேர்தல் நடக்க போறது உறுதியானதா தகவல்.. அதுக்குள்ள இப்போதைக்கு இங்க இருக்க கணக்குகள முடிக்க சொல்லிட்டாங்க.)

அடியாள், "ஹெனம், மே கொம்யு னிஸ்ட்காரயாகே கத்தாவ இவர கரலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமுத?" (அப்போ, இந்த கம்யூனிஸ்ட் காரன் கதைய முடிச்சுட்டு விடுறதா?" என சந்தேகத் தொனியில் கேட்டான்.

அதற்கு அந்த அதிகாரி, " ஊ, வித்தரக் நெமே, அர மீடிய பல்லத் கத்தாவ இவர கரலா உதேதட பீச் எக்கட்ட விசிக் கரன்ன." (இவன மட்டும் இல்ல, அந்த மீடியாகார நாயையும் சேர்த்து கதைய முடிச்சு பீச் ஓரத்துல காலைல போட்டு ருங்க..)

சரி என்று தலை ஆட்டிய வண்ணம், ராமனை, அந்த ஊடகவியலாளர் இருந்த இடத்தில் கைகளை கட்டாமல் கிடத்தி விட்டு அடுத்த வேலைகளை கவனிக்க ஆயுத்தமாகிவிட்டனர்.

உடனே இவர்களின் கதையை உடனடியாக முடிக்காமல், வரிசையாக மற்றவர்களை மெது மெதுவாக அப்புறப் படுத்திவிட்டு, மூன்று நாட்கள், இவர்களின் நகங்களை ஒவ்வொன்றாக பிடுங்கி, ஒருவரின் சிறுநீரை மற்றவருக்கு குடிக்க கொடுத்து, அடித்து, கடும் சித்தரவதைக் குள்ளாக்கி, கடைசியாக உயிர் பிச்சை தருகிறோம், ஆனால் அரசாங்கத்திற்கு எதிரான எந்த வித தவறான செயல்பாடு களில் ஈடுபட மாட்டோம் என்று கூறச் சொல்லியும், முடியாது என்று கூறவே, கதையை முடிப்பதற்கு முனைந்தார்கள். மன்னிக்கவும், இல்லையானாலும், இந்த கட்டிடத்தில் உள்ள வந்தவர்களை யாரும் இவர்கள் உயிருடன் திருப்பி அனுப்பியது இல்லை என்பதே நிதர்சனம்.

இவர்களை கொண்டு சொல்லும் சாக்குகளை எடுத்து வந்து,இன்னும் சில வேலைகளை பார்த்து ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர். அந்த நேரத்தில், அரை மயக்கத்தில் இருந்த ராமனிடம், ஊடகவியலாளர் கிசுகிசுக்க தொடங்கி னார்.

ஊடகவியலாளர், "மா தேச பலன்ன, மகே ஹத்தே அத்தி குட கேமராவ மிலதி கன்ன."( என்ன பாருங்க, என் கையில இருக்க இந்த மினி காமெராவை வாங்கிக் கோங்க )

ராமன், ''மொனவத தியன்னே மேகேன்!?" (என்ன இருக்கு இதுல..?)

ஊடகவியலாளர், " மேக்க, என் ஷர்ட் பட்டன் ஓட இருந்த கேமரா, இதுல நான் இங்க வந்ததுல இருந்து நடந்த எல்லாமே ரெகார்ட் ஆகி இருக்கும்.. இவனுக கண்ணுக்கு இது தெரியாம போயிருச்சு.. ஆனா இத எப்டி சரி நீங்க தான் என் நண்பன் குணசேகர கிட்ட கொண்டு போய் சேர்க்கனும்.. நான் வெளிய போறது கன்போர்ம் இல்ல ஆனா நீங்க இங்க இருந்து போறதுக்கு நான் வழிய உருவாக்குறேன்.." என்று கூறினார்.

ராமன் "எளியட்ட யண்ட ஒனே தமாய், ஹெபெய் எய் மம் வெனுவேன் அவதானமக் கன்னே!'' (வெளிய போகணும் தான்.. ஆனாலும் எனக்காக நீங்க எதுக்கு ரிஸ்க் எடுக்கணும்!)

ஊடகவியலாளர், " மட்ட பவ்லேயக் நேஹ..தனி புத்கலயேக்..ஹெபெய் ஒய ஹேம நெஹ்மே..அப்பி தென்னேகேன் எக்கநெட்ட மெத்தனின் இந்தலா யன்ன வெனவா, ஹெத் மகே ஹெங்கட சக்தியக் நெஹ.. ஒய யன்ட ஏக்க தமாய் ஹரி.." (எனக்கு குடும்பம் இல்ல.. தனி ஆள்.. ஆனா உங்களுக்கு அப்பிடி இல்ல. இன் னொன்னு நம்ம ரெண்டு பேருல ஒருத்தர் இங்க இருந்து வெளிய போகணும் ஆனா அதுக்கு என் ஒடம்புல சக்தி இல்ல..நீங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போங்க அதான் சரி..)என்று கூறினார்.

தூரத்தில், இவர்களுக்கான சவக்குழி ஆயுத்தமாகிக் கொண்டிருப்பதை கவனித் தார்கள். பிஸ்டல் ரக துப்பாக்கி ஒன்றும், அவர்களின் ஒருவன் கையில் இருப்பதை கண்டு, இருவரும் ஒருவரையொருவர் பார்த்து கொண்டனர். அவர்களில் துப்பாக்கி உள்ளவன் அருகில் வரும் வேளை, ஊடகவியலாளர், ராமனுக்கு தப்பித்து செல்லும் வழியை விளக்கப்ப டுத்தி முடித்தார். ஆனால், அந்த ஊட கவியலாளர், அவர் மேற்கொள்ள இருந்த செயற்பாடு யாது என்று ராமனுக்கு தெரியவில்லை. அருகில் அவன் வந்து, வாய்க்குள்ளே என்னவோ முணுமுணுத் துவிட்டு, அவர்களின் முகத்திற்கு நேராக எச்சில் துப்பினான். அவனின் மறைமுக நடவடிக்கைகளை ஓரிரு நாட்களாக அவதானித்து இருந்த ஊடகவியலாளர், அவன் அருகில் வந்ததும், எழும்பி தடு மாறி விழுவது போல் அவன் மேலே விழுந்து, அந்த அடியாளனின் கரைமை தூன உணர்ச்சியை தூண்டிவிட்டான்.

ராமனுக்கு, விடயம் புரிந்துவிட்டது., கண்ணீர் மல்க வேதனை கொண்டார். ஊடகவியலாளர், கண்களால் சமிஞ்ஞை செய்ய, சரியாக அவர்கள் பாழ் அடைந்த அந்த அறைக்கு செல்லும் வரை காத்தி ருந்தார், ராமன்.

அவர்களும், மெதுவாக அறையை நோக்கி நடக்க ஆரம்பித்தனர். அப்படியே, தூரத்தில் இருந்த இன்னொருவனையும் பார்த்து கொண்டிருந்தார், ராமன். அறைக் குள் அவர்கள் நுழைந்ததும், மெதுவாக எழும்பி, காமெராவை பத்திரப்படுத்திக் கொண்டு, இவர்கள் கிடத்தி இருந்த திசையின் பின்புறமாக இருந்த வாசலை நோக்கி வேகமாக ஓட தொடங்கிவிட்டார்.

சட்டென்று, அந்த அறையில் இருந்து துப்பாக்கி சூடு சத்தம் கேட்க, ஒரு சில நிமிடங்கள், சிலை போல நின்று, திரும்பி போய் பார்க்கலாமா என்று யோசித்து, கால்களை பின்னோக்கி எடுத்து வைத்து, ஒரு சில வினாடிகளில் திரும்பி பார்க்கா மல் வேகமாக வாசலை நெருங்க ஆரம்பித்தார். இவர், ஓடுவதை கண்ட அறையின் வெளியே இருந்த ஆள், "அடேய்..பறப்பயலே.." என்று கத்திக்கொண்டு, இவனை பின் தொடர வந்து, மீண்டும் ஒரு துப்பாக்கிச் சூடு கேட்க பின்னர் வேகமாக அறையை நோக்கி ஓடினான்.

அங்கிருந்து ஓடியவர், எப்படியோ மறைந்து மறைந்து அடுத்த நாள் காலை தன் குடும்பத்தாரிடம், போய் சேர்ந்து விட்டார்.

இவ்வாறு, நினைவலைகளை மீட்டெ டுத்த வண்ணம் இருந்த போது, கதவு தட்டும் சத்தம் கேட்க, சுய நினைவுக்கு வந்தார், ராமன்.

அந்த பத்திரிகையை எடுத்து இருந்த இடத்தில் வைத்துவிட்டு கதவை திறந்து, மனைவியையும் பிள்ளைகளையும் புன் சிரிப்போடு உள்ளே போகச் சொல்லி கதவை வேகமாக அடைத்தார். காரணம், லண்டனில் இது பனி பொழியும் வாரம் என்பதால் தான்.

மெதுவாக வந்து ரேடியோவை போட தொடங்கும் போது, அவரது இளைய மகளோ, "அப்பா, எந்த காலத்துல இருக்கீங்க! இது டெக்னாலஜி வேர்ல்ட், உலகத்துல நடக்குற அவ்வளோ நியூஸ யும் லைவ் அஹ் போன்ல பார்த்துரலாம். இன்னும் ரேடியோ கேட்டுகிட்டு" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேளிக்கையுடன் கூற, ராமன்,

" கேட்கலாம் தான்.. ஆனா ஒரு சில பழக்கவழக்கமோ, மனுஷங்களோ பழகிருச்சுன சாகுற வரைக்கும் மாறாது" என்று உரையாடல் நீண்டு கொண்டு போக, மனைவி, சூடாக கொண்டு வந்த காபியை எடுத்துக் குடித்துக்கொண்டு ஜன்னல் ஓரமாக நடந்து சென்று நின்றார்.

தன் வாழ்நாளில், நடந்த அந்த கொடூர நாட்களை மீண்டும் நடக்காமலும் அதை மறக்கவும், தன் மனைவி, மகன், மற்றும் மகளோடு இலண்டனில் வந்து மிகவும் நிம்மதியாக வாழ்ந்து வருவதை எண்ணி, அந்த இடத்தை விட்டு நகரும் வேளையில், அருகில் இருந்த தான் வேலை செய்யும் அலுவகல சார்ந்த பத்திரங்கள் அடங்கிய அந்த சிறு அலுமாரியை திறந்து, ஓரமாக ஒரு சிறு பெட்டியில் வைக்கப்பட்டிருந்த ஊடகவியலாளர் கொடுத்த காமெராவை பார்த்துப் பெரு மூச்சு விட்டு, மீண்டும் மூடிவிட்டு திறப்பை எடுத்துக்கொண்டு சமையல் அறையை நோக்கி நடக்கலானார்.

# ராவணன்

ஒரு முழுமையான மனிதனின் உச்சக்கட்ட எடுத்துக்காட்டாக ராவணன் தன்னைப்பார்க்கிறான் . தான் தெய்வாம்சம் பொருந்தியவன் என்பதுபோல அவன் வெளிவேசம் போடவில்லை. சமூக மற்றும் சமயரீதியான விதி முறைகள் அவனை மட்டுப்படுத்தவில்லை. மனிதன் எவ்வாறு இருக்கவேண்டும் என்று இயற்கை விதித்திருந்ததோ அவன் அவ்வாறே இருந்தான். ராமனின் விசயத்தில் செய்ய முடிந்ததைப்போலவே ராவணனின் விசயத்தில் அவனது மற்ற ஒன்பது முகங்களையும் இந்தச் சமூகத்தால் ஒடுக்க முடியவில்லை. ராமன் தெய்வீகப் புருசனாகப் பார்க்கப்படக் கூடும் , ஆனால் ராவணன் பூரணத்துவம் பெற்ற ஒரு மனிதனாகவே திகழ்ந்தான். தனது தணியாத விருப்பங்களின் மீது எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லாத, ஆனால் வாழ்க்கையை ஆரத் தழுவுவதற்கும் முழுமையாக ருசித்துப் பார்ப்பதற்கும் ஆர்வமாக இருந்த ஒரு மனிதனின் குறியீடாகவே நமது இதிகாசங்கள் ராவணனைப் பத்து முகத்தோனாகச் சித்தரிக்கின்றன.

- ஆனந் நீலகண்டன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமலையைச் சேர்ந்த இவரின் மஞ்சரிக்கான முதல் கதை. தொடர்ந்து எழுதுவார் எனக் காத்துள்ளோம்

# மனநிலை மாற்றங்கள்

நிலவூர்ச் சித்திரவேல்



காஞ்சனா ரீச்சர் கல்லூரி அலுவலகத்துள் நுழைந்து வரவுப் பதிவேட்டில் தனது கையொப்பத்தை இட்டபின் கைப்பையை மீண்டும் தோளில் கொழுவிக்கொண்டு தனது கைக்கடிகாரத்தைப் பார்த்தார். காலைக் கூட்டத் துக்குக் கால் மணிநேரம் உண்டு என்பதை அறிந்து கொண்டு ஆசிரியர் ஓய்வு அறைக்குள் போய் அமர்ந்து கொண்டு தனது நேரசூசியை எடுத்து நோட்டம் விட்டுக் கொண்டிருந்தார். ரீச்சரைக் கதை கொடுத்துக் குழப்பக் கூடாதென்று சக ஆசிரியர்கள் தமது பாட்டில் தொடர்ந்து கதைத்துச் சிரித்துக் கொண்டி ருந்தார்கள். காஞ்சனா ரீச்சருக்கு இருப்புக் கொள்ளவில்லை. விறுக்கென்று எழுந்தார். சக ஆசிரியர்களை முறைத்துப் பார்த்தார் ஒரு சிலுப்புச் சிலுப்பி விட்டு ஓய்வு அறையை விட்டு வெளியேறி மீண்டும் அலுவலகம் நோக்கி வீறு நடைபோட்டுக் கொண்டிருந்தார். மேலும் சில ஆசிரியர்கள் தத்தம் வரவுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளைப் பதிவு செய்துவிட்டு ஓய்வு அறை நோக்கிச் செல்லும் போது காஞ்சனா ரீச்சரின் கடுகடுத்த முகத்தையும் கடுகதி நடையையும் பார்த்து விட்டு அவருடன் கதை கொடுக்கத் தயங்கி அவர்களும் தமது பாட்டில் இன்று ரீச்சருக்கு என்ன நடந்தது என்று தமக்குள் அனுதாபமாகக் கதைத்தபடியே ஓய்வு அறைக்குள் சென்று அங்கிருந்த ஆசிரியர்களை விசாரித்தார்கள். அவர்களும் அதுதான் எங்களுக்கும் புரியவில்லை என்று சொல்லவும் காலைக் கூட்ட மணி அடிக்க எல்லோரும் எழுந்து வெளியே சென்றனர். காலைக்கூட்டம் முடிவடைந்ததைத் தொடர்ந்து முதலாம் பாடம், இரண்டாம் பாடம் என்று கிரமமாக மணி அடித்து நான்காம் பாடம் முடிவடைந்ததும் 'இடைவேளை'க்கான மணி அடிக்கப்பட்டது. கட்டவிழ்த்து விடப்பட்ட கால் நடைகள் போலத் துள்ளிக் குதித்துக் கொண்டு மாணவர்கள் தத்தம் தேவைகளுக்கேற்பப் பிரிந்து பிரிந்து சென்றார்கள். அந்தக் கிராமத்துப் பாடசாலையில் சிற்றுண்டிச்சாலை என்று ஒன்று இல்லை. அதற்கான தேவையும் இல்லை. மாணவர்கள் வீட்டிலிருந்து அம்மாமார் ஆசையுடன் செய்து கொடுக்கும் சத்துணவுத் தயாரிப்புகளைத் தமக்குள் கலந்து பரிமாறி உண்டு களிப்பார்கள். அதனை நகரிலிருந்து வரும் ஆசிரியர்களும் கண்டு களிப்பார்கள்.

இடைவேளையின்போதும் காஞ்சனா ரீச்சர் ஓய்வு அறைக்குச் சென்று ஏனைய ஆசிரியர்களுக்கு முகம் கொடுப்பதைத் தவிர்த்துக் கொண்டு மாணவர்கள் வெளியேறி வெறிச்சோடிப்போயிருந்த வகுப்பறைகளுள் தனக்கு ஐந்தாம் பாடம் ஒதுக்கப்பட்டுள்ள பத்து 'ஏ' வகுப்பறையில் ஏகாந்தமாய் அமர்ந்திருந்தார். இதனை அவதானித்த சபேசன் ஆசிரியர் நேரே ஆசிரியர் ஓய்வறைக்குச் சென்று அங்கிருந்து நாட்டு நடப்பும் வீட்டுநடப்பும்பேசிக்கொண்டிருந்த ஆசிரியர்களைப் பார்த்து, "காஞ்சனா ரீச்சருக்கு என்ன நடந்தது? ஒரே சோகமாக தனிமையாக உட்கார்ந்திருக்கிறார். நீங்கள் யாராவது அவரிடம் ஏதாவது கேட்டறிந்தீர்களா?" என்று கேட்டார். "அதுதான் எங்களுக்கும் புரியவில்லை. தம்பி, நீர் சின்னப் பெடியன் மாதிரி அவவிடம் போய்க் கேட்டு வந்து எங்களுக்கும் சொல்லும்" என்று தூது அனுப்பினார்கள்.

சபேசன் ஆசிரியர் உண்மையிலேயே அந்த ஆசிரியர் குழாத்தில் வயதிலும் இளையவர். தோற்றத்திலும் சிறியவர். இளகிய மனமும் கொண்டவர். அவர் நேரே பத்து 'ஏ' வகுப்பறை வாசல்வரை போய், "ரீச்சர், உள்ளே வரலாமா?" என்று ஒரு மாணவனைப்போல் பணிந்து கேட்டார். ரீச்சர் சுய நினைவுக்குத் திரும்பியவராய் சபேசனைப் பார்த்துத் தலையை ஆட்டினார். அதனை அனுமதிச் சமிக்ஞையாக எடுத்துக்கொண்டு சபேசன் உள்ளே நுழைந்து ஆசிரியர் மேசைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரே இருந்த மாணவர் கதிரையொன்றில் அமர்ந்து கொண்டு, "என்ன ரீச்சர் இன்று காலையில் வந்த நேரம் முதல் ஒரே கவலையாக இருக்கிறீர்கள்? ஒருவருடனும் முகம் கொடுத்துக் கதைக்கிறீர்களுமில்லை. தனிமையிலேயே இருக்கிறீர்கள். நீண்ட நாட்கள் விடுமுறையில் நின்று வந்திருக்கிறீரகள். வீட்டில் ஏதும் பிரச்சனைகளா? உங்கள் முகத்தையும் போக்கையும் பார்க்க எனக்கு ஏதோ சக ஆசிரியர் என்ற முறையில் மனதுக்குச் சங்கடமாக இருக்கிறது. அதுதான் கேட்கத் தோன்றிச்சுது கேட்டிட்டன். சொல்ல விருப்பம் இல்லையென்றால் நான் வற்புறுத்த வில்லை." என்று பக்குவமாகப் பேசினார்.

"தம்பி, நீர் வயசிலும் சரி தோற்றத்திலும் சரி எனக்கு ஒரு மகன் போல வந்து இவ்வளவு மனப்பக்குவமாகக் கேட்டதே பெரிய மன ஆறுதலாக இருக்கிறது. நான் இங்கிருந்து இரண்டு நாள் லீவுதான் போட்டு ஊருக்குப் போனேன். அங்கு போய் இரண்டு நாளிலே வருத்தம் வந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஒரு வார சிகிச்சையின் பின் ரிக்கற் வெட்டி வீட்டுக்கு வந்து வைத்தியர் ஆலோசனைப்படி ஒரு வாரம் ஓய்வெடுத்துத்தான் மெடிக்கல் சேட்பிக்ற்றுடன் வந்து இன்று கடமை செய்கிறேன். நீர் இவ்வளவு கரிசனையாகக் கேட்டதற்கு நன்றி. இப்போ எனக்குக் கடவுளே என்று உடல் வருத்தம் ஒன்றும் இல்லை. இந்த ரீச்சர்மார் ஒருத்திகூட என்னிடம் வந்து நீர் கேட்டதுபோல எனது நீண்ட லீவைப்பற்றி அனுதாபமாக ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. அதுதான் தம்பி எனக்குக் கவலையும் அத்தோடு கோபமும். நான் ஒரு வெளிமாவட்ட ஆசிரியையாக ஊர்விட்டு இந்த ஊர் வந்து சேவை செய்தும் பெரும்பாலும் உள்ளூராசிரியர்களாயிருக்கும் ஒருவருக்குக் கூட ஒரு நன்றியுணர்வுகூட இல்லையே." என்று தன் ஆதங்கத்தைக் கொட்டினார்.

இடைவேளை முடியும் மணி ஒலித்தது. மாணவர்கள் உள்ளே விரைந்துவர சபேசன் ஆசிரியரும் வெளியேறினார். ஓய்வு அறையிலிருந்து அதே வேகத்தில் ஆசிரியர்கள் வெளியேறுவதில்லைத் தானே! சபேசன் அங்கு போய் ரீச்சர் சொல்லிய அத்தனையும் ஒப்புவிக்காமல் சுருக்கமாக ரீச்சர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்ததையுயம் நீண்ட நாள் லீவில் நின்று வந்த தன்னிடம் அவர்கள் எதுவும் கதைக்காததால்தான் கவலைப்பட்டதாகவும் கூறினார் என்பதை மட்டும் தெரிவித்துவிட்டு சபேசன் ஆசிரியரும் தனது பாட வகுப்புக்குச் சென்றுவிட்டார்.

சக ஆசிரியர்களுக்கோ இப்போ குற்ற உணர்வு. இருந்தாலும் அதற்கு மேலால் சபேசன் ஆசிரியர் போய்க் கதைத்தபின் தாங்கள் இனிப் போய்க் கதைப்பதும் கௌரவப் பிரச்சனை. அதனால் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தும் காஞ்சனா ரீச்சருடன் மௌனம்சாதித்துக்கொண்டிருந்தார்கள்.

சம்பவம் நடந்து இரு வாரங்கள் ஓடிய போதும் இரு தரப்பினரில் எவரேனும் இறங்கியதாக இல்லை. சபேசன் ஆசிரியர் மட்டும் அடிக்கடி காஞ்சனா ரீச்சருடன் கதைத்துப் பேசி அவரது கவலையையும் கோபத்தையும் படிப்படியாகத் தணித்து வந்ததில் அவருக்கு மகிழ்ச்சியும் மனத் திருப்தியும்.

வைத்தியமனையிலிருந்து 'ரிக்கற் வெட்டி' விடும்போது கொடுக்கப்பட்ட பணிப்பிற்கிணங்க ரீச்சர் வைத்திய மனைக்குப் போய்த் தனது உடல்நிலை தேறிவருவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மீண்டும் இரண்டு நாட்கள் லீவு பெற்றுக்கொண்டு தனது ஊருக்குச் சென்றுவிட்டார். அங்கு போனபின்புதான் ரீச்சர் விடயம் அறிந்து அந்த வாரம்முழுவதும் லீவில் நிற்கவேண்டியதாயிற்று.

மீண்டும் ரீச்சர் பாடசாலைக்குச் சமுகம் அளித்தார். இம்முறை சில சக ஆசிரியர்கள் தமது பிடிவாதத்தை இழக்கிவிட்டுத் தாம் முந்திக்கொண்டு ரீச்சருக்கு மீண்டும் என்ன சுகயீனம் ஏற்பட்டதென நலம் விசாரிக்கப் புறப்பட்டார்கள். ஆனால் அந்தச் சபேசன் ஆசிரியர் ரீச்சருக்குத் தன்மீது ஏற்பட்டுள்ள மதிப்பை மேலும் வலுப்படுத்திக் கொள்வதற்காகத் தான் முந்திக் கொண்டு ரீச்சர் இருந்த வகுப்பறைக்கு நேரே சென்று, "குட் மோணிங் ரீச்சர். இந்தமுறையும் ஊருக்குப் போய் ஒரு வாரம் நின்று வந்திருக்கிறீர்கள். மீண்டும் சுகயீனமோ ரீச்சர்?" என்று மிக அனுதாபமாக நலம் விசாரித்தார்.

ரீச்சருக்கு வந்ததே ஒரு கோபம். "மிஸ்ரர் சபேசன், நீர் என்ன, என்னை ஒரு தீராத வருத்தக்காரி என்று நினைத்துக் கொண்டீரோ. கதைக்கிறதைக் கவனமாய்க் கதைக்கப் பழகிக்கொள்ளும். உம்மீது எனக்கிருந்த மதிப்பு பரிவு அனைத்தையும் இத்தோடு இல்லாமற் செய்து விட்டீர். இங்கே உள்ளவர்கள் எல்லோரும் என்னை ஒரு இழக்கமாகத்தான் கணித்துவைத்திருக்கிறீர்கள் என்ன?" என்று 'வள்' என்று எரிந்து விழுந்தார். பாவம் சபேசன்! வாலைச் சுருட்டிக்கொண்டு வகுப்பறையை விட்டு வெளியேறுவதை விட வேறு வழியின்றி, "அடிக்கடி அற்ப விடயங்களுக்காக அநாவசியமாக மனோநிலையை மாற்றிக் கொள்ளும் மனநிலை மாறிகளை 'மூடி கறெக்ரர்ஸை' (Moody Characters) திருத்தவே முடியாது" என்று தனக்குள் முணுமுணுத்தவாறே சென்றுவிட்டார்.

---

**மறந்து விடாதீர்கள்!**
**உங்கள் படைப்புகளுடன் உங்கள் வங்கி விபரங்களையும் உங்களைப் பற்றிய சிறுகுறிப்பும் இணைத்து விடவும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த இவர் ஓயாமல் எழுதிக் கொண்டிருக்கிறார். நல்லதொரு சிறுகதை எழுத்தாளினி. எழுத்தை ஆளும் திறமை படைத்தவர்.

# மயக்கமென்ன?

சியாமளா யோகேஸ்வரன்

காலைக் கதிரவன் உதயமாகப் போவதைக் கட்டியம் கூறும் வகையில் கீழ்த்திசை மெல்லச் சிவக்கத் தொடங்கியிருந்தது. கணவன் குகனும் ஊரில் இல்லை என்பதில் படுக்கையில் புரண்டு படுத்த மாலாவுக்கு எழுந்திருக்க மனம் வரவில்லை.

குகனை நினைத்ததும் மனதில் ஒரு வேதனை தோன்றியது. தம்பதிகள் இருவரும் ஒருவருக்கொருவர் அன்பாகவும் அனுசரணையாகவும் இருந்தது மகள் கவிக்குப் பதின்ம வயது வரும் வரைக்கும் தான். அதற்குப் பிறகு மாலா மகளுடன் அதிகக் கண்டிப்புடன் நடந்து கொள்வதாகக் குகனும், குகன் அதிகச் செல்லம் கொடுத்து மகளைக் கெடுப்பதாக மாலாவும் குறைகள் சொல்லத் தொடங்கியதில் தம்பதியினரிடையே சின்னதாய் ஒரு இடைவெளி ஏற்பட்டு விட்டிருந்தது.

எட்டாம் வகுப்பைத் தொட்டு விட்ட கவி எதற்கெடுத்தாலும் ஏட்டிக்குப் போட்டியாகப் பதில் பேசத் தொடங்கவே மாலாவின் பொறுமை பறந்து போனது. குகனும் மகளைக் கடிந்து ஒரு வார்த்தை கூடச் சொன்னதில்லை.

பிள்ளையை சரியாக வளர்த்துக் கொண்டிருக்கின்றோம் என்ற நினைப்பில் பேரடி விழுந்த ஒரு வெள்ளிக்கிழமையை அத்தனை இலகுவில் மறக்க முடியவில்லை. கவிக்கு கர்நாடக சங்கீத வகுப்பு ஐந்து மணிக்கு இருக்கின்றது என்பது திடீரென ஞாபகத்துக்கு வர, செய்த வேலையை அப்படியே விட்டு விட்டு அரக்கப் பரக்க வீட்டுக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளம்பி வந்து சேர்ந்தாள். கவி அப்போதும் தயாராகாமல் இருந்ததைக் கண்டதும் ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது.



"என்ன கவி? இன்னும் ரெடியாகாமல் என்ன செய்கிறாய்?"

"ஏன் இன்றைக்கு என்ன?"

"மியூசிக் வகுப்பு இருக்குதெல்லே?"

"உந்த மியூசிக்கைப் படிச்சு நான் என்ன செய்யப்போறன்? எனக்குப் படிக்க நிறையக் கிடக்குது."

"ஆனால் இன்றைக்கு வகுப்பு இருக்குது. இனிமேல் கான்சல் பண்ணேலாது. நேரம் போயிட்டுது. கெதியா வெளிக்கிடு." மாலாவுக்கு வீட்டுக்கு வருவதற்கு தான் பட்ட சிரமங்கள் ஞாபகத்துக்கு வர பொறுமை சுத்தமாய் பறந்து விடும் போல் தோன்றியது.

"எனக்கு மியூசிக் படிக்க விருப்பமில்லை." கவியின் குரலில் அத்தனை அழுத்தம்.

நேரத்தைப் பார்த்த மாலாவுக்கு இனிமேல் வகுப்புக்கு நேரத்துக்குப் போய்ச் சேர முடியாது என்று தோன்றியது.

இன்றைக்கு இரண்டில் ஒன்று பார்த்து விடுவது என்று தீர்மானித்தாள் மாலா. துளிர்க்கத் துடிக்கும் மகளின் பிடிவாதத்தை முளையிலேயே கிள்ளி எறியாவிடில் பிரச்சனை என்பது நன்றாகவே விளங்கியது.

"என்ன தேவை என்பதைத் தீர்மானிக்கிற வயசு உனக்கு இன்னமும் வரேல்லை. இப்ப நாங்கள் சொல்றதைக் கேட்டு அடக்க ஒடுக்கமா இருக்கிறதைப் பார். இல்லாட்டி நான் மனிசியா இருக்க மாட்டன்."

சொல்லி முடிக்க முன்னர் முகத்தை நீட்டிக் கொண்டு அறைக்குள் சென்று கதவை அடித்துச் சாத்தி விட்டு மறைந்தவளைப் பிடித்து இரண்டு சாத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்று எழுந்த எண்ணத்தை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

சற்று நேரம் பொறுத்து வீட்டுக்கு வந்த குகனிடம் தன் வருத்தத்தைக் கொட்டி மகளைக் கூப்பிட்டுக் கண்டிக்குமாறு கூறினாள்.

"பிள்ளை" குகன் கூப்பிட்டது கவிக்கு நிச்சயம் கேட்டிருக்கும் ஆனாலும் எந்தப் பதிலும் வரவில்லை.

அறைக்குள் சென்று மகளின் அழுது சிவந்து போயிருந்த முகத்தைப் பார்த்ததும் குகனின் முகமும் வேதனையில் சுருங்கியதை மாலா கவனிக்கத் தவறவில்லை. மகளின் முகம் சுருங்கினால் குகனின் உயிர் துடிக்கும் என்பது மாலாவுக்குத் தெரியும்.

"குகன், அவா இனிமேல் மியூசிக் கிளாசுக்குப் போக மாட்டாவாம்"

"வேண்டாம் விடு. அவளுக்குப் பிடிக்காட்டி வற்புறுத்தாதே." சொன்னவனை மாலா வேதனையுடன் பார்த்தாள்.

பக்திப் பாடல்களையோ, சினிமாப் பாடல்களையோ மகளின் தேன் குரலில் கேட்கலாம் என்ற ஆசையுடன் கட்டிய கோட்டையை தகப்பனும் மகளுமாய் சேர்ந்து உதைத்துத் தள்ளியது வேதனையை கொடுத்தது.

தாயின் மனது கவிக்கும் தெரியும். பஞ்சபுராணத்தைப் பண்ணுடன் பாட வேண்டும். பாரதியார் பாடல்களையும், மெலடியான சினிமாப் பாடல்களையும் மகளின் குரலில் கேட்க வேண்டும் என்னும் மாலாவின் ஆசை பற்றியும் தெரியும்.

மகளை சமாதானப்படுத்த வெளியில் சென்று சாப்பிடலாம் என்று குகன் கேட்டதற்கு மறுப்புச் சொல்லி விட்டுப் படுக்கையில் போய் சுருண்டு கொண்டு விட்டாள் மாலா. அவள் போகவில்லை என்பதற்காகத் தந்தையும், மகளும் வெளியில் போகாமல் நின்று விடவில்லை என்ற உண்மை அவளுக்கு வலியைக் கொடுத்தது.

இப்படியான சம்பவங்கள் அன்றுடன் மட்டும் முடிந்து விடவில்லை. அவை தொடர்ந்து கொண்டே தான் இருந்தன. கவி தான் நினைப்பவற்றை எல்லாம் குகனின் மூலம் நிறைவேற்றிக் கொண்டாள். மறுத்து நியாயம் சொல்ல முயன்ற போதெல்லாம் தன்னை ஒரு வில்லியாக மகள் பார்ப்பது புரிந்தும், தந்தையுடனும் மகளுடனும் மாலா மல்லுக்கு நின்றாள்.

சட்டைகள் மேலேயும் கீழேயும் சுருங்கிக் கொண்டு போவதை ஒரு கட்டத்துக்கு மேல் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை.

ஒரு நாள் தலைவலி என்று மாலாவால் அவளது நண்பியின் வீட்டுப் பிறந்த நாள் கொண்டாட்டத்துக்குக் கிளம்ப முடியவில்லை. குகனையும் கவியையும் சென்று வருமாறு கூறியிருந்தாள்.

மேலேயும் கீழேயும் இலாஸ்டிக் கிலானது போன்ற உடை கவ்விப் பிடிக்க, மகள் தயாராகி வந்த விதத்தைப் பார்த்ததும் தலைவலியையும் மறந்து சண்டைக்குத் தயாரானாள்.

"என்னடி உடுப்பு இது?"

"ஏன் இதுக்கு என்ன குறைச்சல்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கட ஆட்களிண்ட பங்சனுக்குப் போறாய், இந்தக் கோலத்திலை போனா என்ன நினைப்பினம்?"

"உங்கட ஆட்கள் மட்டும் இப்பிடி உடுப்புப் போடுறதில்லையே? எத்தினை பேரை நானே இப்பிடி உடுப்போட பார்த்திருக்கிறன். பங்சனுக்கு வரும் போது மட்டும் அடக்க ஒடுக்கமா சாறியும் சல்வாரும் போட்டு வந்திட்டால் சரியே?"

மகளின் பேச்சில் உண்மை இருப்பதை உள்மனம் ஏற்றுக் கொண்டாலும் அதை வெளிப்படையாக ஒப்புக் கொள்ள மனம் வரவில்லை.

"வாய் இருக்குது என்பதுக்காக கனக்கக் கதையாதே. மரியாதையா சட்டையை மாற்றிப் விட்டுப் போ. இல்லாட்டிப் போகாதே."

அவ்வளவுதான் கவியின் முகம் மலர்ந்தது.

"நான் போகேல்லை, அப்பா மட்டும் போகட்டும். இப்பிடியான பங்சனுக்குப் போனா, கூடிக் கூடி ஊர்வம்பு கதைக் கிறதும், சாப்பிடுறதும், வர்றதும் மட்டும் தானே?"

குகன் மகளைச் சமாதானம் செய்து சல்வாரைப் போட வைத்துக் கூட்டி வந்தான். போய் விட்டு வருகிறேன் என்று கூடச் சொல்லாமல் தந்தையுடன் செல்லும் மகளைப் பார்க்கையில் இருந்த தலைவலி இன்னமும் கூடாமல் இல்லை.

அன்று மாலை முகநூலின் பதிவுகளைப் பார்த்துக் கொண்டு வரும் போது, நண்பி ஒருவர் பதிவிட்ட புகைப்படங்களைப் பார்த்தவள் அதிர்ந்தே போனாள். எந்த உடையை அணியக் கூடாது என்று மகளைத் தடுத்தி நிறுத்தினாளோ அதே உடையுடன் கவி ஒரு குழுப்படத்தில் சிரித்தவண்ணம் நின்றதில் போன தலை வலி மீண்டும் வந்து விட்டிருந்தது.

மாலாவின் முகத்தைப் பார்த்து விட்டு ஆதரவாகப் பேச முயன்ற குகனிடம் பேசவே மனம் வரவில்லை. எனக்கு உண்மையாக இருக்காமல் மகளுக்கு முன்னுரிமை கொடுக்கிறான் என்பதை அவளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சரி எது பிழை எது என்று மகளுக்கு எடுத்துச் சொல்லாமல் கண் மூடித்தனமாக அவளை ஆதரிப்பது வருத்தத்தைக் கொடுத்தது.

ஒற்றைக் குரலாய் தான் எது சொன்னாலும் எடுபடப்போவதில்லை என்பது நன்றாகப் புரிய, மாலா தனக்குள்ளேயே ஒதுங்கிக் கொண்டாள். குகனும் அடுத்த மாநில வேலைக்காக அடிக்கடி சென்று வந்ததில் தம்பதிகளுக்கிடையில் பேச்சு வார்த்தை குறைந்து விட்டிருந்தமை என்னமோ உண்மைதான்.

பதினோராம் வகுப்பில் மாலா வாழ்க்கைக்கு உதவாது என்று நினைக்கும் நாடகம், பாட்டு என்று பாடங்களைத் தெரிவு செய்த போது ஒருதரம் எச்சரிக்கை செய்து பார்த்தாள். அதுவும் செவிடன் காதில் ஊதிய சங்காய் போகவே அத்துடன் ஒய்ந்து விட்டாள்.

பன்னிரண்டாம் வகுப்பில் இறுதிப் பரீட்சைகள் முடிந்ததுமே சுப்பர் மார்க்கெட் ஒன்றில் வேலைக்குச் சேரப் போவதாகச் சொன்னபோது மாலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்லாமல் குகனும் கூடத் தான் அதிர்ந்து விட்டான்.

"கவி, இந்தச் சுப்பர் மார்க்கெட் வேலை ஒன்றும் நிரந்தரமில்லை. நல்ல வேலை ஒன்றை எடுக்கக் கூடியது மாதிரி ஏதாவது பாடத்தைப் படியேன்." குகனின் குரலில் வருத்தமும் இயலாமையும் அப்படியே புலப்பட்டன.

"ரீச்சர் வேலை என்னால பார்க்க முடியாது. இந்தக் காலத்துப் பிள்ளைகளைக் கட்டி மேய்க்க முடியுமே?"

மாலாவுக்கு அந்தச் சூழ்நிலையிலும் இகழ்ச்சியான சிரிப்பு ஒன்று இதழ்கடையில் தோன்றத் தவறவில்லை.

எங்கு பிழை விட்டோம்? பெற்றோர் நாங்கள் இருவரும் எங்களின் அகங்காரத்துடன் ஒதுங்கிக் கொண்டது தவறா? அல்லது கவி பிறக்கும் போதே இப்படியான குணநலன்களுடன் படைத்து விட்டது இறைவனின் தவறா?

அதற்குப் பின்னர் வீட்டில் பேச்சு வார்த்தைகள் முற்றிலுமாய் குறைந்து போயின. நண்பிகளுடனோ அல்லது நண்பர்களுடனோ கவி பொழுதைப் போக்குகிறாள் என்பது தெரிந்ததும் ஒருநாள் மெதுவாகப் பேச்சுக் கொடுத்தாள்.

"கவி, இரவு நிறைய நேரம் வெளியில் நின்றால் அடுத்த நாள் எப்பிடி வேலைக்குப் போறது? களைப்பாய் இருக்குமெல்லே? கொஞ்சம் நேரத்தோட வீட்டுக்கு வாவன். அம்மாவும் தனியத்தானே இருக்கிறன்?"

"எனக்கு வீட்டுக்கு வர விருப்பமில்லை. எனக்கு இங்க யாருமே இல்லை. படுக்க மட்டும் தான் வீட்டுக்கு வருவன்." நின்று பதில் சொல்லாமல் கவி நடந்து கொண்டே சொல்லிக் கொண்டு சென்ற வார்த்தைகள் அம்பாய் நெஞ்சைக் கிழித்தன.

என் வாழ்க்கை ஏன் இப்படி ஆனது? ஒருவரோடு ஒருவராய் ஒன்றாய் இணைந்து தந்தையாய், தாயாய், நண்பராய் மூன்று பேரும் எப்படி எல்லாம் வாழ வேண்டும் என்று கற்பனை செய்து வைத்திருந்தேன்.

அந்த வார இறுதியில் குகன் வீட்டுக்கு வந்திருந்த போது தன் அகம்பாவத்தைக் கட்டி வைத்து விட்டு, மகளின் நிலைமையைச் சொல்லி அழுதாள். கேட்டுக் கொண்டிருந்த குகனின் கண்களில் இருந்தும் கண்ணீர் சொட்டிக் கொண்டிருந்தது. அவனும் இத்தனை நாட்களாய் வெளியே சொல்ல முடியாமல் துக்கத்தை நெஞ்சுக்குள் பூட்டி வைத்திருந்திருக்கிறான் என்பது புரிந்ததில், இருவருமாய் சேர்ந்து அழுது தம் துக்கத்தை இறக்கிக் கொண்டார்கள்.

குகன் அன்று மகளுடன் பேசியே தீருவது என்று தூங்காமல் காத்திருந்தான்.

"ஹாய் டாட்" தந்தையைக் கண்ட சந்தோசம் குரலில் அப்பட்டமாகவே எதிரொலித்தது.

"ஹாய்மா எப்பிடி இருக்கிறாய்?" பேச நினைத்த அத்தனையையும் மறந்து விட்டிருப்பான் குகன் என்று மாலா நினைத்துக் கொண்டாள். நினைத்தது சரிதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது போல் அடுத்த ஐந்து நிமிடத்தில் தொங்கிய முகத்துடன் குகன் அறைக்கு வந்து சேர்ந்தான்.

அடுத்த நாள் காலையில் மகளுடன் பேச முற்பட்ட போது,

"பிளீஸ் டாட் அம்மா மாதிரி நீங்களும் தொடங்காதேங்கோ, எனக்கும் சரி பிழை தெரியும்." சொல்லி விட்டு நீண்டு விட்ட முகத்தை மறைக்க கூலிங்கிளாசை மாட்டிக் கொண்டு கிளம்பி விட்டாள். அதிகம் தொந்தரவு கொடுத்தால் வீட்டில் இருந்து கிளம்பி வெளியில் போய் தங்கி விடுவாளோ என்ற அச்சமும் அவர்களிடம் இருந்தது.

ஒருநாள் தன் மனதுக்குப் பிடித்தவன் என்று சொல்லி ரசல் என்றொரு வெள்ளை யினத்தவனை அறிமுகப்படுத்தி இருந் தாள். பார்த்தவுடன் அவனில் அத்தனை நன்மதிப்பு வந்து விடவில்லை. உடலில் பச்சை குத்திக் கொண்டு, காதில் சின்னதாய் ஒரு தோடு போட்டுக் கொண்டு வார்த்தைக்கு வார்த்தை குகன், மாலா என்று பெயர்களை அழுத்தம் திருத்தமாய் சொல்லிக் கொண்டிருப்ப வனை அந்தக் காலத்து உணர்வுகள் இன்னமும் உயிர்ப்புடன் ஓடிக் கொண்டி ருந்தவர்களுக்கு எப்படிப் பிடிக்கும்?

வந்திருப்பவனுக்கும் சேர்த்து சமைக்க வேண்டியது கூட மாலாவுக்குப் பெரி தாகத் தோன்றவில்லை. இவர்கள் எப்போது தான் கல்யாணத்தைக் கட்டிக் கொள்ளப் போகிறார்களோ என்ற கேட்க முடியாத கேள்வியே தொண்டைக் குழியில் ஒட்டிக் கிடந்தது. தயக்கத்தை உதறித் தள்ளி விட்டு ஒரு நாள் கவியிடம் கேட்டாள்.

"கவி, எப்போது உங்கள் திருமணத்தை வைத்துக்கொள்ளலாம் என்று சொன் னீர்கள் என்றால் நாங்கள் மிச்ச ஏற்பாடு களைப் பார்த்துக் கொள்ளலாம்."

"அம்மா, இதெல்லாம் எங்கள் பர்சனல் விசயம், அதுவுமில்லாமல் ரசல் இன்னமும் என்னைப் புரபோஸ் செய்ய வில்லை."

இதற்குப் பிறகு என்ன புரபோசல்?

இரண்டு நாட்களாகவே அந்த ரசலை வீட்டுப்பக்கம் காணவில்லை. கவியும் வீட்டை விட்டு எங்கேயும் போகவில்லை. எதுவுமே சாப்பிடக் கூட வரவில்லை என்றவுடன் தாயின் மனது தவிக்கத் தொடங்கி விட்டிருந்தது.

சனிக்கிழமை என்றால் மாலா சமைத்து முடித்து விட்டு வீட்டின் பின்புறம் வளர்க்கும் மரக்கறிப் பயிர்க ளுடன் தன் நேரத்தைச் செலவிடுவாள்.

தண்ணீரைப் பாய்ச்சிக் கொண்டி ருக்கும் போது, கவியின் அறையில் இருந்து உரத்த குரலில் ஏதோ சத்தம் கேட்பது போன்றிருக்க, நீர் பாய்ச்சுவதை நிறுத்தி விட்டு உற்றுக் கேட்டாள்.

என்ன கத்துகிறாள் என்பதே புரி யவில்லை. ஆனால் பேச்சின் முடிவின் போது அழுகுரல் கேட்கவே மாலா பதறிப் போனாள். பெற்றோரை அழ வைத்தி ருக்கிறாளே தவிர, அவள் என்றைக்குமே அழுததில்லையே? சேறு படிந்திருந்த கைகளையும் கால்களையும் கழுவிக் கொள்ள வேண்டும் என்று கூடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றவில்லை. வீட்டுக்குள் ஓடி வந்து கவியின் கதவைத் தட்டினாள். கவி கதவைத் திறக்க மாட்டாள் என்று புரிந்த நொடி ஒரு நெடுமூச்சு ஒன்று வெளியேறியது. பெற்றவள் பிள்ளைக்கு அந்நியராகி விடும் கொடுமை, பிள்ளையில்லையே என்று வருந்துவதை விடக் கொடுமையானது என்பது புரிந்தது.

சோர்வுடன் திரும்பி நடக்கத் தொடங்கிய வினாடி, கதவு திறக்கப்பட்டது. இந்தக் கவி எங்கே? தேடிய கண்களுள் கட்டிலில் சுருண்டு படுத்திருந்த கவியின் முதுகு தென்பட்டது. என்னமோ சரியில்லை என்று தோன்றியது. கட்டிலின் விளிம்பில் அமர்ந்து கொண்டாள்.

"கவிம்மா.. என்ன நடந்தது?"

"ஒன்றுமில்லை."

"ஒன்றுமில்லாவிட்டால் நீ இப்படி இருக்கமாட்டியே? துள்ளிக் கொண்டு திரிவாய். என்னடா நடந்தது?"

கேட்டு முடிக்க முன்னர், தாயின் மடிக்குத் தாவி முகத்தைப் புதைத்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கி விட்டாள்.

"கவி, அழாதடா. என்ன நடந்தது?" மாலா பதறியே போனாள்.

"ரசலுக்கு என்னைப் பிடிக்கேல்லையாம். பிரேக் அப் பண்ணிட்டான். நான் அவனில எவ்வளவு பாசம் வைச்சிருந்தன் என்றதை அவன் புரிஞ்சே கொள்ளேல்லை அம்மா. எனக்குக் கஷ்டமா இருக்குது."

பாசம் என்ற வார்த்தை மகளுக்குப் புரிந்திருப்பதும் அது அவளுக்கு வருத்தத்தைக் கொடுத்திருக்கிறது என்பதும் ஏனோ மாலாவுக்கு திருப்தியைக் கொடுத்தது.

"சரிடா, அதைப் பற்றிக் கவலைப் படாதே. எல்லாம் நன்மைக்குத்தான். ஏனோ எனக்கு அவனைப் பற்றி நல்ல அபிப்பிராயம் இல்லை. கொஞ்ச நாளில நீ அவனை மறந்திடுவாய்."

"அவனை மறக்கலாம் அம்மா, அது ஒன்றும் பெரிய கஷ்டமில்லை. ஆனால் அவனை ஞாபகப்படுத்துறது மாதிரி ஒரு உயிர் வரப்போகுதே?"

மாலாவுக்கு அதிர்ச்சியில் மூச்சே நின்று விடும் போல இருந்தது.

"உண்மையாவோ?" அதற்கு மேல் கேட்பதற்கு வார்த்தைகள் வரவில்லை. அழும் மகளின் முதுகை மெதுவாக வருடிக் கொடுத்தாள்.

இவளே ஒரு குழந்தை. இவளுக்குள் ஒரு குழந்தையா? என்ன செய்வது இப்போது? நொடிகள் அமைதியை விழுங்கிக் கொண்டு கடந்தன.

"என்ன யோசிச்சிருக்கிறாய் கவி? இன்னமும் உனக்கு எவ்வளவோ இருக்குது. இப்பிடியே முடங்கி போகப் போகிறாயா?"கவி இந்தக் காலத்து பிள்ளை. இலகுவில் துடைத்தெறிந்து விட்டு நகர்ந்து விடுவாள் என்று மாலா போட்ட கணக்கு பிழைத்துப் போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் கொலைகாரியாக மாட்டேன் அம்மா. என்னுடைய பிள்ளை அது." மாலாவுக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

கண்ணில் காணாத குழந்தை மேல் உனக்கு இவ்வளவு பாசம் இருக்கும் போது பொத்திப் பொத்தி வளர்த்த உன் மேல் எங்களுக்கு எவ்வளவு பாசம் இருக்கும்? கேட்க நினைத்தாலும் கேட்க முடிய வில்லை.

தாய்மைக்கே உரிய தனிப்பண்பை மகளிடம் கண்டு விட்டதில் ஒரு தாயாய் மாலா மகிழ்ந்தாலும் சிட்டுக்குருவியின் கால்களுக்கு விலங்கு மாட்டி விட்ட து போன்றதான உணர்வில் தவித்துப் போனாள்.

"அம்மா, நான் இனிமேல் உங்களுக்குச் சுமையாக இருக்க மாட்டேன். நான் மேற்கொண்டு படிக்கப் போகிறேன். ஒரு அம்மாவாய், ஒரு பெண்ணாய் வரக்கூடிய சவால்களைச் சந்திக்கப் போகிறேன்."

வழமை போன்றே உறுதியான குரலில் கவி சொல்லும் போது மாலாவால் அதை மறுத்துப் பேச முடியவில்லை. ஆனாலும் மகளைக் கட்டிக் கொண்டு கண்ணீர்க் குரலில் சொன்னாள்.

"உனக்கு உன் பிள்ளை எவ்வளவு முக்கியமோ, அதைப் போலத் தான் எங்களுக்கும் நீ முக்கியம். உன்னை எங்கேயும் விட மாட்டோம். என்ன நினைக்கிறாயோ அத்தனையையும் செய். நாங்கள் உனக்குத் துணை இருப்போம்." சொன்ன தாயின் அன்பில் கரைந்து போனவளாய் கவி தாயை இறுகக் கட்டிக் கொண்டாள்.

"உங்களுக்கு கஷ்டமா இருக்காதோ அம்மா? எல்லாரும் என்னைப் பற்றிக் கேவலமாகக் கதைக்கப் போறினம்."

"பரவாயில்லடா. சரியான பாதைக்கு வர நினைக்கிற உனக்குக் கை கொடுக்க வேண்டியது எங்கட கடமை. ஊரைப் பற்றிக் கவலைப்படத் தொடங்கினால் கவலைப்பட்டுக் கொண்டே தான் இருக்க வேணும்."

"வா, நேரத்துக்கு சாப்பிட வேணும். இடியப்பமும் சிக்கன் கறியும் இருக்குது. இரண்டு மூன்று நாளா நீ சாப்பிடவே யில்லை." சொல்லி விட்டுச் சமையல றையை நோக்கி நடந்த தாயைக் கட்டிக் கொண்டு சேர்ந்து நடந்தாள் கவி.

கவியைச் சாப்பிட வைத்து விட்டு குகனுக்கு அழைப்பை ஏற்படுத்தினாள்.

அத்தனையையும் அமைதியாகக் கேட்டவன்.

"உன்ர சுமையைப் பகிர்ந்து கொள்ள நானும் இனிமேல் பிறிஸ்பேனுக்கு மாற்றல் எடுத்துக் கொண்டு வந்துடுவன்." குரல் தளதளக்கக் குகன் முடிக்கு முன்னர், அவன் குரலிலிருந்த பரிவில் மாலாவின் கண்கள் ஊற்றெடுக்கத் தொடங்கின.

**மறந்து விடாதீர்கள்!**
**உங்கள் படைப்புகளுடன் உங்கள் வங்கி விபரங்களையும் உங்களைப் பற்றிய சிறுகுறிப்பும் இணைத்துவிடவும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வட்டம்




**திக்குவெல்லை கமால்**

மிகச் சிறந்த சிறுகதை ஆசிரியர். சிங்களக் கதைகளை தமிழிற்குக் கொண்டுவருவதில் சிறந்த மொழி பெயர்ப்பாளராகவும் உள்ளார்







எரிக் இலையப்பாரச்சி (1954 ) சிங்கள சிறுகதை இலக்கியத்தை கலைத்து வத்தால் போஷித்த ஐந்தாம் கட்ட(1980--1990) எழுத்தாளராவார்.

சிறுகதை.நாவல் , கவிதை ஆய்வு , திரைக் கதை , சரிதம் போன்ற பல துறைகளில் ஐம்பதுக்கு மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார்.நிறைய பலதரப்பு விருதுகளையும் வென்றுள்ளார்.


' மினிஸ் வடய ' (2011) என்ற தொகுப்புலிருந்து இக்கதை தெரிவு செய்யப்பட்டது.

சிங்கள மூலம்: எரிக் இலையப்பாரச்சி

தமிழில் : திக்குவெல்லை கமால்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையிலும் கடலிலும் வான் பரப்பிலும் ஒரே வேளையில் கேட்குமளவிற்கு எழுந்த அந்தப் பலத்த குரல் , ஸ்ரீபள்ளி படகுத்துறையில் பழுதடைந்த படகுகள்மீது மோதித் தெறித்து எதிரொலித்தது.

" சு...த...யோ..."

அன்று ஞாயிறு மாலை என்பதால் வேலையற்ற கடற்துறையும் மீன் சந்தையும் சுபஸிங்ஹ காலத்து மீனவர் கூட்டுறவுக் கடையும் அமைதியில் ஆழ்ந்துபோய்க் கிடந்தன. கடல் நீர் தேங்கி இற்றுப் போய்க் கொண்டிருந்த பெரும் படகொன்றில் இடம்பிடித்திருந்த கேரளப் பருந்தொன்று , குழப்பமடைந்து கடற் பரப்புக்கு மேலாக சிறகடித்துச் சென்றது.

நல்ல மனம் கொண்டவன் என்பதால் சுயவிருப்பில் ஏற்றுக் கொண்ட வேலையொன்றுக்குப் போகும் வேளையில் இவ்விதமாக முழு உலகிற்கும் கேட்கும்படி சத்தமிடுவது லெய்யாவுக்கு வேதனையாக இருந்தது. அவன் ஓடிக்கொண்டிருப்பது நங்கூரம் கழன்ற தெரேஸா மல்காந்திப் படகு கடற்பக்கமாக மிதந்து செல்வதை உரியவர்களுக்குச் சொல்வதற்காகத்தான்.

தெரேஸா படகு கரையைவிட்டு விலகிச் செல்வது, ஸ்ரீபள்ளித் தங்கு துறையோடு கோபித்துக்கொண்டு போவது போலிருந்தது. தனக்குச் சொந்தமற்ற போதும் தெரியாத கடலுக்குள் தத்தளிப்பது அவனுக்கு கவலையளித்தது. சிலபோது

தூரதேசமொன்றுக்கு அது மிதந்து போய்ச் சேரக்கூடும். கல்லில் செதுக்கப்பட்ட விசாலமான தலைகள்கொண்ட பண்டிகைத் தீவு அவனுக்கு ஞாபகம் வந்தது. அஸ்தமிக்கும் சூரிய ஒளி கடல்மீது விழுந்திருப்பது , அது செல்ல வேண்டிய வழியைக் காட்டுவது போலிருந்தது.

தெரேஸா மல்காந்தி படகின் உரிமையாளர்கள் , லாசருஸ் தேவாலயத்திற்கும் ஆரம்பப் பாடசாலைக்கும் இடையிலுள்ள ஹார்மோனிய வீட்டிலேயே வாழ்ந்தனர். நீண்ட காலமாக தேவாலய இசைக் கருவிகளுக்குப் பொறுப்பாக இருந்த இவ்வீட்டார் மீனவர்களோடு எவ்வித சம்பந்தமும் கொண்டிருக்கவில்லை. அவ்வீட்டிலிருந்து ஆசிரியர்களும் ஆசிரியைகளுமே தோன்றினர். அல்லது மதகுருக்களும் கன்னியாஸ்திரிகளுமே உருவாகினர். தெரேஸாப் படகு அவர்களுக்கு இத்தாலியிலிருந்து அன்பளிப்பாகக் கிடைத்த ஒன்றாகும்.

லெய்யா இவ்வீட்டு யுவதி ஒருத்தியை உயிருக்குயிராய்க் காதலித்தது , வானில் ஒளிரும் தாரகைக்குக் கல் எறிவதுபோன்ற மடத்தனமான செயலாகும். ஒருநாளும் ஈடேறாத அந்தக் காதல் லெய்யாவின் மனதையும் சுவாசப்பைகளையும் கிழிக்கும் கூராயுதமாகியது. அவனது அதிர்ஷ்டம் ஒவ்வொரு ஞாயிறு தினமும் தெரேஸாவைக் காணக்கூடியதாக இருந்தது. அவள் அவனுக்கு நடமாடும் சிலை போலானாள். தெரேஸா இத்தாலிக்குச் சென்ற பின்னர் அவன் கடற்கரை நெடுகப் பாடியவனாக தீவாந்திரமுனைவரை சென்றான். ஆறு மாதங்களின் பின்னர் மீண்டும் ஊருக்கு வந்தபோது , அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதற்கும் அஞ்சாத சுதந்திர புருஷனாகத் திகழ்ந்தான்.

அவனது குரல் மீண்டுமோர் தடவை கடற்துறை எங்கும் எதிரொலித்தது.

" ச..த..யோ.."

சிறிதும் பெரிதுமாக நூற்றுக் கணக்கான படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுத் துறையை லெய்யா கோபத்தோடு பார்த்தான். சத்தமிட்டபடி எஞ்சின் அறைக்குள் புகுந்தது நெப்போலியன் என்பதையும் அவனோடிருப்பது லெட்டா என்பதையும் லெய்யா அவதானித்தான். கணங்கும் ஒவ்வொரு நொடியிலும் படகு கடலுக்குள் அடித்துச் செல்வதை நினைத்த அவன் கல்வேலியைத் தாண்டி சுண்ணாம்புக் கற் பாதையை அடைந்தான்.

அந்நாளின் இறுதிச் சூரியக் கதிர்கள் சில நீரேரிக் கண்டல் மர உச்சியில் சிக்கிக் கொண்டன. சிறிய குருவிகள் மாலை இருளுக்குள் மறைந்து போயின. கடலோரமாக அமைந்திருந்த , சுண்ணாம்பினால் செப்பமிட்டு மஞ்சள் பூச்சிட்ட விசாலமான சுவர்களைக் கொண்ட சாந்த மொனிகா மடத்து மலர்களின் வாசம் காற்றோடு சங்கமித்திருந்தது. கன்னியாஸ்திரிகள் பேரிருளில் கல்வேலிக்குள் மறைந்து குளிக்கும் நீர்த்துறை அவனுக்கு ஞாபகம் வந்தது.

பெரும் கல்வேலி பலவற்றை அவன் கடந்தான். களப்புவில் பெருவலைக்காரரின் லாந்தர் விளக்கொளி தொலைவில் தெரிந்தது. கடலுக்கு முன்பே முகத்துவாரம் இருளடைந்தது. அது இயற்கையின் சுபாவம் மட்டுமல்ல கடவுளின் ஒழுங்கமைப்பும்கூட. இராணுவ வீரன் பெனடிக் பிரணாந்துவின் உருவச் சிலையைத் தாண்டுகையில் பாடசாலைக் காலம் அவன் மனதில் எழுந்தது. யானை இரவில் காணாமல் போன பெனடிக் அவனது பாடசாலைத் தோழன். கூட்டுறவுக் கடைக் கூரையில் அசைந்தாடும் கிழிந்த தேசியக் கொடியில் காணப்படும் சிங்கம் உயிருள்ள உருவமாக ஓடிவந்து அவனுக்குள் வீர உணர்வைப் பாய்ச்சியது.

கல்வேலியில் மோதும் கடல்... கடற்பெருக்கிற்கேற்பக் காலையிலும் மாலையிலும் மாறிக்கொண்டிருக்கும் நீரேரி... இற்றைக்கு நூற்றி ஐம்பது வருடங்களுக்கு முன்பு தரைதட்டிய சிலையொன்று காரணமாக எழுந்த தேவாலயம்... நோயாளிகளுக்கு உதவி ஒத்தாசை புரியும் கன்னியாஸ்திரிகளின் மொனிகா மடம்...ஆசிரியர் ஒருவர் கூரைப் பெருவளையில் அரிவாளும் சுத்தியலும் பதித்த பின் மரணத்திற்குள்ளான ஆரம்பப் பாடசாலை... இரண்டு குருமாருக்கு சமயப் பணிக்காக சமர்பிக்கப்பட்ட கடற்துறையுடன் கூடிய கிராமம்.. இப்படி எல்லாமே லெய்யாவுக்கு சாறு நிரம்பிய கரும்புத் தோட்டமாகவே தெரியும். நிரந்தரத் தொழிலற்ற லெய்யா நினைக்கும் நேரமெல்லாம் அந்தக் கரும்புத் தண்டுகளைப் பிழிந்து சாறெடுப்பான்.

ஊரில் இருக்கும்போது அவன் மீன் ஏலவிற்பனையில் சேர்ந்து கொள்வான். சோர்வு தட்டும்போது பாலத்தின் மீதிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டில் வீசுவான். நீண்ட பாம்பு போன்ற விலாங்கு மீன் பிடிக்கும் கைராசி அவனுக்குண்டு. தேவாலய காணிக்கைப் பெட்டி களவெடுத்த சந்தர்ப்பங்களும் உண்டு. படகு வேலைத் தல மெக்கானிக் பெடியன்கள்தான் அவனுக்கு ' சதயா ' என்று பட்டப் பெயர் சூட்டினர். காற்று வீச்சுக்கேற்ப இயங்கும் படகு , கட்டுமரம் என்பன மோட்டார் படகுகளின் காரணமாக வீழ்ச்சிக்குள்ளாகின. இருந்தும் கட்டுமரக்கார்கள் சிலர் ஊரில் தொடர்ந்தும் இருக்கவே செய்தனர்.

லெய்யா கட்டுமர வேலைத்தலத்தில் கையுதவிக்காரனாக இருந்தான். கட்டுமரம் செய்யும்போது ஈய நாணயங்களை வைத்து ஆணியடிப்பது சம்பிரதாயமாகும். ஒரு கட்டுமரத்தை முழுமைப்படுத்த ஈயக்காசு நூற்றுக் கணக்கில் தேவைப்படும். லெய்யா கடைகடையாகச் சென்று ஈயக்காசு சேகரிப்பான். ஈயக்காசு தட்டுப்பாடாக இருப்பதால் ஒவ்வொரு நாணயத்திற்கும் அவனுக்கு ஐந்து ரூபா கிடைக்கும்.

தெரேஸா தொடர்பாக அன்பு மனமொன்று உதயமானதை தனக்கு அதிர்ஷ்ட லாபச் சீட்டொன்று கிட்டியதாக உணர்ந்தான். யாராவது அதுபற்றி வினவும்போது அவன் பெருமிதமடைந்தான். வானில் பிரகாசிக்கும் பலகோடி நட்சத்திரங்களில் தானும் ஒன்றென அவன் நினைத்தான். ஹார்மோனிய வீட்டை வெட்கத்திற்குள்ளாக்கி தெரேஸா கர்ப்பம் தரித்த பின்னரும் அவன் நட்சத்திரமாகவே பிரகாசித்துக் கொண்டிருந்தான். ஹார்மோனிய வீட்டு வெளிப்பக்கத்தை மிதித்து தெரேஸாவை கஷ்டத்திற்குள்ளாக்கியது தானல்ல என்பதையிட்டு லெய்யா கடவுள் முன்னிலையில் பெருமிதமுற்றான். அவன் படகுச் செய்தியை சொல்வதற்காக ஹார்மோனிய வீட்டுக்கு ஓடிச் சென்றபோது , தெரேஸா இத்தாலிக்குச் சென்று ஐந்து வருடங்களாகி இருந்தன. அங்குவந்த அவன் பலகை கேற்றுக்கு மேலாக மேல்மாடியை அவதானித்தான்.

நிம்மதியாக இருந்தபடி தெரேஸா புத்தகம் வாசிப்பதும் அங்கிருந்து ஓகன் நாதம் பரவுவதும் லெய்யாவுக்கு ஞாபகம் வந்தது. இன்னும் அந்த அகந்தை அங்கு குடியிருக்கத்தான் செய்தது. காதல் சகவாசம்கூட இல்லாமல் திடீரென்று தெரேஸா கர்ப்பமாகி அந்த வீட்டை வெட்கத்திற்கு உள்ளாக்கியது அப்போது லெய்யாவுக்கு அதிசயமாகவே இருந்தது.

வாயிலுக்குப் பூட்டுப் போடப்பட்டுள்ளதையும் அந்த வீட்டில் எவரும் இல்லை என்பதையும் லெய்யா கவனித்தான். அது சொற்ப காலத்திற்கு முன்பே கைவிடப்பட்ட வீடாகவே தெரிந்தது. மரம் மட்டைகள்கூட காய்ந்து போயிருந்தன. ஹார்மோனிய வீட்டில் நடந்ததெல்லாம் லெய்யாவுக்கு கவலையை வார்த்தது. அவன் அழுதழுது மீண்டும் ஓட ஆரம்பித்தான். தெரேஸாப் படகைத் தேடிப்பிடித்து கொண்டுவந்து படகுத் துறையில் கட்டுவதே அவனது ஒரே இலக்கு.

கட்டுமரம் ஒன்றையும் துடுப்பொன்றையும் தேடிக்கொண்டு கடலுக்குள் சென்ற அவன் , நீண்ட தூரத்திற்கப்பால் தெரேஸாப் படகு மிதந்துகொண்டிருப்பதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டான். மிகுந்த சிரமத்தோடு கம்மன் கயிற்றால் படகைக் கட்டி இழுத்துக் கொண்டு வந்தான். படகுத் துறைக்கு வரும்போது இருள் கவிந்திருந்தது. அவன் படகிலே மல்லார்ந்து சாய்ந்து கொண் டான். வானிலே பல்லாயிரம் தாரகைகள் பளபளத்தன. படகின் தொடுதலை ஒரு பட்டு நூல்கூட இல்லாத பெண்ணாக அவன் நினைதான். அந்த இரவு படகே லெய்யாவுக்குப் படுக்கையானது.

படகுத் துறையிலிருந்து புறப்படத் தயாரான ட்ரோலர் ஒன்றின் சத்தம் அவன் காதில் அமானுஷ்யமாக ஒலித்தது. ஊரில் உள்ளவர்கள் எல்லோருமே இரத்த உறவு கொண்டவர்களாக இருந்தபோதிலும் ஒருவர்கூட தன்மீது இரக்கம் கொண்ட வர்களாக இல்லையென்று லெய்யா நினைத்தான்.

ஊரிலிருந்து வெகுதூரம் சென்று தேநீர் க் கடையொன்றிலோ சேனைக் காட்டிலோ தங்கிவிடுவது நல்லதென்று நினைத்தான். அப்போது ஊர்பற்றி எல்லை மீறிய வெறுப்பு அவனுக்கு. மோசமான நடத்தை , களவு , வழக்கு வாதங்களால் ஊர் நிரம்பி வழிந்தது. காமவெறி கொண்ட லைவோருக்கும் வம்புப் பிறவிகளுக்கும் குறைவிருக்கவில்லை. மாளிகை போன்ற மும்மாடி வீட்டை மைக்கல் பாப்பா போதை வஸ்துப் பணத்தினாலேயே கட்டி எழுப்பினான். நகரசபை உறுப்பின ரான பன்றிருபேரு இன்று ஒரு கோடீஸ் வரன்.

கடலுக்கும் தரைக்குமிடையே நடைபெற்ற பாரதப் போர் போன்ற யுத்தத்தில் தரைநிலம் தோற்றுப்போய் அழிந்துவிட்டதான உணர்வு அவன் மனதுக்குள் புகுந்தது. வானிலே மங்கிய ஒளியோடு நிலாத் துண்டொன்று தெரிந்தது. நீள் கூந்தலுடன் கூடிய தெரே ஸாவின் அழகிய தேகம் தேவமாதாவின் சிற்பம்போல் அவனது ஞாபகத்திற்கு வந்தது. அவள் கள்வர்களுக்கும் நய வஞ்சகர்களுக்கும் மனைவியாகிவிட்ட ஊர்ப் பெண்களைப்போல் வெறுக்கத் தக்கவள் அல்ல. தெரேஸாவுக்கு தகப்பன் இல்லாப் பிள்ளை கிடைத்ததை லெய்யா அந்நேரத்தில் மறந்துவிட்டான்.

முற்றுகையிடத் தயாராவதுபோல் தூரக்கரையில் மனிதக் குழுவொன்று அங்குமிங்குமாக நடமாடுவதை அவன் அவதானித்தான். இன்னும் நெருங்கிப் பார்த்தபோது மிகவும் கவர்ச்சியான ஆடையணிகளுடன் நிற்பதுபோலவும் தெரிந்தது. பயத்துடனும் ஆவலுடனும் லெய்யா அவர்களை மேலும் நெருங் கினான். அவர்கள் புலிப் பயங்கரவாதி களாக இருக்கக்கூடுமென அவன் கருதினான்.

அவர்களிடையே புதுமுகங்கள் எவரும் இல்லாததையும் எல்லோரும் எப் பொழுதுமே காணும் மனிர்கள்தான் என்பதையும் அவன் உறுதி செய்து கொண்டான். டைகோட் அணிந்திருந் ததால் வித்தியாசமான தோற்றம். முனிஷ்வரப் படகின் லோரன்ஸ் அண் ணாவின் உருவம் ஜெனரல் கொப்பேகடுவ போலிருந்தது. மாலே அய்யா அநுர பண்டாரநாயகபோல் கழுத்துச் சால்வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியபடி கடலைப் பார்த்த வண்ணமிருந்தான். அழுக்கான கிழிந்த உடுப்புக்களோடும் சிதைந்த பனைத் தொப்பிகளோடும் நடமாடப் பழகிவிட்ட , தனக்கு மிக நெருக்கமான வர்கள் இந்த இருண்ட விடியலில் எதற்காக இப்படியெல்லாம் தோற்ற மாற்றத்துடன் காணப்படுகின்றனர் என்பது லெய்யாவுக்கு பெரும் புதிராகவே இருந்தது.அவன் அந்த மனித வட்டத்திற்குள் பாய்ந்து சுழன்று தனது நண்பர்களையும் உறவி னர்களையும் அவதானித்தான்.

“ டே நீங்கெல்லாம் மெக்புல் பிடவை கடைய உடைத்தவங்களல்லவா? கடும் கள்ளங்களடா நீங்கள்”- தன் கண்களை நம்ப முடியாத நிலையில் லெய்யா கத்தினான். கோட் பையும் ட்ரங்க் பெட்டியுமாக இன்னொருவன் வந்து அந்தக் குழுமத்தில் சேர்ந்துகொண்டான். குழுவினரின் எண்ணிக்கை பதினெட்டாக உயர்ந்தது.

“ நாங்க இத்தாலிக்கு போறம்.நீ யாருக்கும் இதைச் சொல்லாதே.நாம வரும் வரையில எங்கட வீடு தோட்டங்கள பார்த்துக் கொண்டிரு “- மாக்ஸ் பீரிஸ் வெள்ளைக் கைக்குட்டையுடன் லெய்யாவின் தோளில் கை வைத்தவனாகச் சொன்னான். பீரிஸ் தம்பியின் கண்கள் நிரம்பியிருப்பதை லெய்யா சந்திர ஒளியில் கண்டான். அவர்களது வாழ்வின் உத்தரவாதம் பற்றி அவனுக்கு பயம் மூண்டது.இந்த ஆபத்தான பயணத்தை எப்படியாவது தடுக்க வேண்டுமென்று அவன் வெகுவாக யோசித்தான்.

“ முடியாது...இது அபாயகரமான பயணம்... நான் ஒருத்தரையும் போகவிடமாட்டன்...நான் ஷெல்டன் பொலிஸ் ராலஹாமியிடம் சொல்லி எல்லாரயும் லகப் பண்ணுவன்..”- லெய்யா கையில் ஒருபிடி மணல் அள்ளியபடி எல்லோரையும் எச்சரித்தான்.

டவுனில் நடமாடும் முஸ்லிம் இளை ஞன் ஒருவனும் அந்த வட்டத்திற்குள் நிற்பதைக் கண்டதும் அவனது கோபம் மேலும் கூடியது.விடுவானா ? கைப்பிடி மண்ணால் அவனுக்கு அடித்தான்.

“ அண்ணா நான் மக்காவுக்கு போறன் “- பயந்தபடி முஸ்லிம் வாலிபன் சொன்னான்.

“ ஆ...மற்றவங்க ரோமாபுரிக்கு பாப்பாண்டவர பார்க்கவா போறாங்க?” லெய்யா வானத்தைப் பார்த்து சிலுவை அடையாளத்தை வரைந்தான்.

பெரிய கடற் பருந்தொன்றுஅவர்களது தலைக்கு மேலாக சிறகடித்துப் பறந்தது. விடிகாலை வான்மேகம் பயங்கரத் தோற்றத்துடன் காட்சியளித்தது.இரவின் பாதுகாப்பும் அவர்களுக்கு இல்லாமல் போய்க்கொண்டிருந்தது.

“ பேய்க்கூத்துப் போடாதே.”- லெய் யாவுக்கு அடிக்குமளவுக்கு ரீவீ ரெபயார் அசோக் கோபமுற்றான்.

லெய்யா மீண்டும் அங்குமிங்கும் சுற்றிவிட்டு வட்ட நடுவுக்கு வந்தான். அது அவனால் உடைக்க முடியாத பலமான வலயம். யாரோ ஒருவன் அவனது கழுத்தைப் பிடித்து நெரித்தான். இன்னொருவன் அவனது அடிவயிற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிதித்தான். அடுத்தவன் நிச்சயமாக கையில் கத்தியோ கோடாரியோ கொண்டுதான் இனி வருவான்.தான் உறவினர் அல்லது நண்பன் ஒருவனால் கொல்லப்படும் கட்டம் வந்துவிட்டதாக மெய்யாகவே லெய்யா நம்பினான். அப்போது தேவதூதர் ஒருவர் வானிலிருந்து வெளிப்பட்டு கருணை நிரம்பிய குரலில் பேசினார்.

" சதயா இங்க பார்...காசு வேண்டாம்...நீயும் வா எங்களோடு...அந்த உள்ளாடைத் துண்டிகளை கழற்றிவிட்டு இந்த வஸ்திரங்களை அவசரமாக உடுத்திக்கொள்.. நேரம் போய்கொண்டிருக்கு...நாங்க கப்பலை தவறவிடுவோம் "- அப்படிச் சொன்னபடி ஜொனிபட்டா , லெய்யாவுக்கு நீளக் காட்சட்டை ஒன்றைக் கொடுத்தான்.

" என்னால் முடியாது.நீங்க சுவேஸ் கால்வாயில விழுந்து செத்துப் போவீங்க... எந்த அரசனிடம் தப்பினாலும் முசோலினி உங்கள சுட்டுப் போடுவான்.யாரும் போகாதீங்க...உங்களுக்கு கடல் தொழில் இருக்கு...உங்களுக்கு படகு கட்டு மரமெல்லாம் இருக்கு...வீட்டில் மனைவிமார் இருக்காங்க...பிள்ளைங்க பள்ளிக்கூடம் போறாங்க.நீங்கள் அநியாயமா தண்ணீரில...சிறையில..."

லெய்யா வெறிபிடித்துக் கத்திக் கொண்டிருக்கும்போதே ஒருவன் அவனது ஜங்கிக்கு மேலால் காற்சட்டையை அணிவித்தான்.கையில்லாத கிழிந்த பனியனுக்கு மேலால் டுவிட் சேர்ட்டை உடுப்பாட்டினான்.சற்று நேரத்தில் அவன் எடுப்பான இளைஞனாக மாறினான்.சவரக்கடைக்காரன் போல் ஒருவன் முகத்தில் பவுடர் தடவி தலமுடியில் வெஸ்லின் பூசினான்.அந்த சவரக் கடைக் கை முஸ்லிம் வாலிபனுடையது என்பதை லெய்யா கவனிக்காமலில்லை. புதிய சப்பாத்துச் சோடி சூரிய ஒளிபட்டுப் பளபளத்தது.

" போவோம்.நாங்க போவோம்.தெரேஸா இத்தாலியில்தான் இருக்கிறாள். அவள் அங்க ரெஸ்டுரெனட் ஒன்னு செய்றாள்."- லெய்யாவின் உறவுச் சகோதரன் ஒரவன் சொன்னான்.

' ஊரைவிட நல்தொரு சூழலில்...இத்தாலிக் காரர் மத்தியில் எனக்கு தெரேஸாவை சந்திக்க முடியும்...இந்த அழகிய தோற்றத்தில் நிற்கும் என்னை அவள் விரும்புவாள் ' இப்படியெல்லாம் நினைத்தான் லெய்யா.

" சரி போவோம் "

---

நான் பயணம் செய்யும் இடமெல்லாம் கடவுளுடன் தங்களுக்கு நேரடித் தொடர்பு இருப்பதாகக் கூறிக்கொண்டு மக்களை ஏமாற்றும் கபடதாரிகளை நான் காண்கிறேன். பண்டைய அரசர்கள் எப்படித் திடீரென்று கடவுள்களாக ஆனார்கள் என்பது விநோதமாக உள்ளது.

**- இராவணன்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரும்பலகை

அத்தியாயம்
17

மு.தயாளன்

அன்று பாடசாலைக்குச் சென்றபோது கபிலனை அதிபர் அழைப்பதாகச் செய்தி வந்தது. உடனேயே அதிபர் அறைக்குச் சென்றான். அவனை அமரச் சொல்லிய அதிபர் " கபிலன், நான் எதையும் நேராகக் கதைப்பவள். உமக்குத் தெரியும். சுற்றி வளைக்காமல் விசயத்துக்கு வாறன். பள்ளிக் கூடத்திலை ஒரு கதையடிபடுகுது.."

என்று அதிபர் கூற கபிலன் சிரித்தான்.

" நீங்கள் சொல்லிற கதை என்ரை காதுக்கும் வந்தது மிஸ். வசந்தியைப் பற்றித்தானே கூறப் போறியள். அதிலை எந்த உண்மையும் இல்லை. அது இங்கை என்னைப் பிடிக்காத ஒரு சிலர் கட்டிவிட்ட கதைதான். நாங்கள் இரண்டு பேரும் நல்ல நண்பர்கள். இருவரும் ஒரே யூனியிலைதான் படிச்சனாங்கள். இங்கை வந்தாப்போலையும் நட்பைத் தொடரிறம்." என்று கூறிவிட்டு நேற்று மாலை நடந்த கதையையும் விளக்கமாகக் கூறினான். வியப்போடு அவனைப் பார்த்த அதிபர் அவனைத் தட்டிக் கொடுத்து "சரியான முடிவுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்திருக்கிறீர். எனக்கு உம்மை ஆசிரியராய் வைச்சிருக்கிறது பெருமையாகவே உள்ளது."

"அப்ப நான் வகுப்புக்குப் போறன் மிஸ்" என்று கூறிவிட்டு மெல்லிய புன்சிரிப்போடு வெளியில் வந்தான். அவன் சிரிப்போடு வருவதைத் தூரத்தில் நின்று பார்த்த சாந்தா ரீச்சருக்கு ஒரே குழப்பமாகிக் போய்விட்டது.

முகத்தை உம்மென்று வைத்துக்கொண்டு வகுப்புக்குப் போய்விட்டாள்.

கபிலனுக்குத் தெரியும் வசந்தி தன்னை விரும்புகிறாள் என்று. ஆனால் தான் அவளை விரும்பாதபோது எப்படிக் குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்வது. இதனை வசந்திக்குச் சொல்லி அவளின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்று மனதுள் நினைத்துக் கொண்டான்.

இன்று ஆறாவதுபாடம் கணித ஆசிரியை மிஸ் பொன்னம்பலம் அவர்களது வகுப்பில் அவரது படிப்பித்தற் திறனை அவதானிக்கவேண்டிய தவணை கபிலனுடையது. அவன் மிஸ் பொன்னம்பலத்திடம் சென்று உங்கள் வகுப்பறைக்கு ஆறாவது பாடம் வருவேன் என்று கூறிவிட்டு வந்தான்.

அவன் வந்து சொல்லிச் சென்ற நேரம் தொடக்கம் மிஸ் பொன்னம்பலம் பதட்டமாகவே இருந்தார்.

கபிலன் பாட அவதானிப்புக்கு வருகிறான் என்றாலே ஆசிரியைகளுக்கு ஒரே பதட்டம்தான். பாடநேரத்தில் கபிலன் பல விடயங்களை அவர்களிடம் இருந்து எதிர்பார்க்கிறான். அவர்களின் பாடத் தயாரிப்புகள், பிள்ளைகளின் தரத்திற்கு ஏற்றவாறு பயிற்சிகள், பாடத்தை முடிக்கும் பாங்கு. கபிலன் வகுப்பறைக்குச் செல்லும் போது கரும்பலகையில் அன்றைய பாடத்தின் நோக்கமும் அதனால் பாட முடிவில் பிள்ளைகள் பெற்றுக் கொள்ளப்போகும் அறிவித்திறனும் எழுதப்பட்டிருக்க வேண்டும். அதை விடப் பயங்கரம் என்னவென்றால் அந்தப் பாடம் சம்பந்தமான தெளிவான அறிக்கையை அடுத்த நாள் காலையே அதிபரிடம் கையளித்துவிடுவான். அதன்பின் அதிபர் அந்த ஆசிரியையைக் கூப்பிட்டு அறிவுரை கூறுவதும் ஆசிரியைக்கான இடுபணி என்ன என்பதையும் கூறிவிடுவார். அதை அடையுமட்டும் அந்த ஆசிரியை பதட்டமடைந்தபடியே இருப்பார்.

இதனால் பல ஆசிரியைகளுக்குக் கபிலன் மேல் வெறுப்பு உருவாகத் தொடங்கி இருந்தது. இந்த வெறுப்பைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்ட சாந்தா ரீச்சர் அவர்களைத் தன் பக்கம் சேர்த்துக் கொண்டு கபிலனுக்குப் பல தொல்லைகளை உருவாக்கத் தொடங்கியிருந்தார். அப்படியான தொல்லைகளில் ஒன்று தான் வசந்திக்கும் கபிலனுக்கும் தொடர்பு இருப்பதாகக் கட்டிவிட்ட கதை.

ஆறாம் பாடத்திற்கான மணி அடித்ததும் கபிலன் மிஸ் பொன்னம்பலத்தின் வகுப்பறைக்குள் நுழைந்தான்.

அந்தப் பாடசாலையில் ஒழுங்காகப் பாடங்கற்பிக்கும் மூன்று ஆசிரியர்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் மிஸ் பொன்னம்பலம். மற்றவர்கள் வசந்தியும் கபிலனுமே.

மிஸ் பொன்னம்பலம் கடமையில் கண்ணானவர். பிள்ளைகட்கு ஒன்று நன்மை பயக்கும் என்றால் மிகக் கடுமையாக அதற்கு உழைப்பார். ஒரு நல்ல ஆசிரியருக்குரிய சகலவிதமான பண்புகளும் அவரிடம் இருந்தன.

கபிலன் வகுப்பினுள் நுழைந்தபோது கரும்பலகையைப் பார்த்தான். தெளிவாக நோக்கம் எழுதப்பட்டிருந்தது. அமைதியாகப் போய் மூலையில் இருந்த கதிரையில் அமர்ந்து கொண்டான். ஆசிரியை படிப்பிக்கும் பாங்கினை அவதானித்துக் கொண்டிருந்தான்.

ஒரு ஆசிரியருக்கு குரல் மிக முக்கியமானது. அவரது குரல் பிள்ளைகளைத் தெளிவாகச் சென்றடைய வேண்டும். குரலில் ஏற்ற இறக்கங்கள் இருக்க வேண்டும். உச்சரிப்புகள் மிகத் தெளிவாக இருக்க வேண்டும். இவ்வளவும் மிஸ் பொன்னம்பலத்திடம் அளவுக்கு அதிகமாகவே இருந்தன.

வியப்போடு அவ படிப்பிப்பதை பார்த் துக் கொண்டேயிருந்தான். பிள்ளைகள் கேட்கும் வினாக்களுக்கு டக்குடக்கென்று பதில்களையும் வழங்கிக் கொண்டிருந்தார். விளங்கும் தன்மை குறைந்த பிள்ளைகளுக்குக் கொஞ்சம் இலகுவான பயிற்சித்தாளைக் கொடுத்து தனிப்பட அவர்களுக்கு விளங்கப்படுத்தியும் கொண்டார்.


இவைகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த கபிலன் ஆச்சரியத்திற்கு மேல் ஆச்சரியம் அடைந்தான். மேலும் சிறிது நேரம் இருந்துவிட்டு நன்றி கூறிவிட்டு வெளியே வந்தான் கபிலன்.

அன்று மதியமே தன்னுடைய சாப்பாட்டு நேரத்தில் மிஸ் பொன்னம்பலம் அவர்களது பாடம் பற்றிய அறிக்கையை மிக அவதானமாகவும் தெளிவாகவும் எழுதி முடித்துவிட்டு அதிபரிடம் கையளித்துவிட்டு மேலதிகமாக ஒரு சிபாரிசும் செய்து விட்டு வந்தான். அவனுக்கென்னவோ அன்று மனதில் சந்தோசம் இருந்தது. மிஸ் பொன்ம்பலத்தை அதிபர் தன்னுடைய அறைக்கு வருமாறு கூப்பிட்டார். மிஸ் பொன்னம்பலம் சிறிது பதட்டத்தோடு அதிபரின் அறைக்குள் நுழைந்தார். "வாங்கோ மிஸ்.. இப்பதான் உங்கள் பாடம் பற்றிய அறிக்கையைத் தந்து சென்றார். அவர் உங்களைப்பற்றி மிக நன்றாகச் சொல்லிவிட்டுச் சென்றார். அத்தோடு ஒரு சிபாரிசும் செய்துவிட்டுச் சென்றிருக்கிறார். நான் மனேச்மென்ற்றோடையும் கதைத்துவிட்டேன். இன்றையிலிருந்து உங்களுக்குப் பதவி உயர்வு. இனிமேல் கபிலனோடு சேர்ந்து பாடங்களை அவதானித்தலையும் செய்யவேண்டும். உங்களுக்குச் சம்மதமா" என்று கேட்டார்.

(இன்னும் வரும்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நண்பேன்டா.......

ஷெல்லிதாசன்

சிறந்த கவிஞர். சிறுகதைத் துறையில் தன் திறமையை நன்றாகக் காட்டி வருகிறார். திருகோணமலையைச் சேர்ந்தவர். மஞ்சரியில் பல கதைகளை எழுதியுள்ளார். நட்புகளுக்கிடையிலான துரோகத்தை இக் கதையில் அழகாகக் காட்டியுள்ளார்.

“இஞ்சேருங்கோப்பா, இந்த வருஷம் பங்குனி மாதம் பத்தாந்திகதியோட மகள் மாதங்கிக்கு முப்பது கடந்து முப்பத்தொரு வயசாகப்போகுது.”

“அதுக்கென்னப்பா நான் செய்ய? அவளுக்கு இருவது வயசாயிருக்கேக்க துடங்கின கலியாணப் பேச்சு முப்பதாகியும் முடிஞ்சபாடில்லை.”

“இந்த வருஷம் முடியிறதுக்கிடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலையாவது அவளின்ரை காரியத்தை முடிக்க வேணும். அவளோடை படிச்ச பிள்ளையள், வேலை செய்யிற பிள்ளைய ளெல்லாம் கலியாணம் கட்டி கையிலையும், வயித்திலையுமா திரியு துகள். நீங்கள் எல்லாத்திலையும் நுணுக் கம் பாத்துக் கொண்டிருக்கிறியள்."

"இஞ்சைபார்". பாக்கிற கலியாண மெல்லாம் ஏதாவதொரு சாட்டிலை தட்டிப்போகுது. பிள்ளையை கலியாணம் கட்டிக்குடுக்கிற நாங்கள் 'உதுகளைப் பாக்கத்தானே வேண்டியிருக்கு."

சாதகம் பொருந்தினால் சாதி பொருந் துதில்லை. சாதி சரியெண்டால் மாப்பிள் ளைக்கு வேலை சரியில்லை. அதுகளும் சரியெண்டால் மாப்பிள்ளை குடிகார னாம். அதுக்குள்ளை சமயம் ஒத்து வருவதாயில்லை. இவள் கொஞ்சம் உயரமானவள். கடைசியா பாத்த மாப் பிள்ளை இவளை விட ரண்டங்குலம் கட்டையெண்டதாலை மாப்பிள்ளைக்கு அது விருப்பமில்லையாம். இப்பிடியெல் லாம் சங்கடங்கள் குறுக்கிட்டால் எப்ப டியப்பா கலியாணம் செய்து வைக்கிறது?

இப்படி தங்களது ஒரே மகள் மாதங் கியின் திருமணத்தைப் பற்றி கதைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர் ராமநாதனும் அவரது மனைவி யோகமும். மகள் மாதங்கி படிப்பில் சுட்டி. தன்னோடு படித்தவர்களையெல்லாம் படிப்பால் பின்தள்ளி சாதாரணதரம், உயர்தரங்களில் சிறப்பாக சித்தியெய்தி பல்கலைக்கழகம் நுழைந்தவள். இப்பொழுது அவளொரு விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியை. மாதங்கி நல்ல எடுப்பான அழகும், குண நலனும் அடக்கமும் கொண்டவள். இளவயதில் அவளைச் சுற்றி பல ஆண்கள் திரிந்தாலும், அதற்கெல்லாம் உணர்வை சோடைபோகவிடாமல் நன்கு படித்தாள். அது போலவே பல்கலைக்கழகத்திலும் காதல் என்ற படி நிலையில் அகப்படாமல், பெற்றோர் பேசிச் செய்யும் திருமணத் தையே விரும்பினாள். ஒரே ஒரு மகளான தன்னால் பெற்றோரின் ஆசை, விருப்பங் களை மீறி தன்னிச்சையாக காலடி வைக்காமல், பெற்றோரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக அவள் நடந்துகொண்டது பலரின் நன்மதிப்பை அவளுக்குத் தந்தது. ஆயினும், பெற்றோர்கள், தனக்கு வரும் திருமணப்பேச்சுக்களில், சாதி, சமயங்கள் பணக்காரன், ஏழை, சாதகப்பொருத்தத்தில் நூலிழையில் தொங்குவது எல்லாமே பெரும் வெறுப்பைததான் தந்தது. தான் எப்படி பெற்றோர் கண்கலங்காமல் இருக்கவேண்டுமெனக் கருதினாளோ, பெற்றோரும் தான் கலியாணம் முடித்து கண்கலங்கக் கூடாது எனக் கரிசனை காட்டுவதை அறிந்தாலும், ஏனோ எல்லாத்துக்கும் நுணுக்கம்பார்ப்பதால், தனக்கான கலியாண வயது தாண்டிச் செல்வதில் கவலைப்பட்டாள் அவள்.

கலியாண வயதிலிருக்கும் குமருகள். எங்கேயிருந்தாலும் துப்பறியும் சிங்கமாய் தேடிப்பிடிப்பதில் மிகுந்த கெட்டிக்காரர் கலியாணப் புறோக்கர் பொன்னம்பலம். அவரது பார்வையிலிருந்து ராமநாதனின் மகள் மாதங்கி மாத்திரம் எப்படி தப்ப முடியும் எனச் சொல்லுங்கள்.

அடிக்கடி ராமநாதனின் வீட்டுக்கு வந்து போவதும், பல சாதக்குறிப்புகளை கொடுத்து பொருத்தம் பார்க்கச் சொல் வதும் பலவருடங்களாகப் பழக்கமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கதியாகிவிட்டது. இருந்தும் சாதகக் குறிப்பு கொடுத்து விட்டு போகும்போது எப்படியும் அவரது கைகளுக்குள் ராம நாதன் ஐந்நூறை, ஆயிரத்தை வைத்து அனுப்புவார். அப்படிச் செய்தாலே புறோக்கர் மகளின் கலியாண விடயத்தில் ஊக்கமாகச் செயல்படுவார் என்ற நப்பாசை ராமநாதனுக்கு. எப்படியும் சுமார் பத்து வருஷமாய் புறோக்கர் பொன்னம்பலம் இந்தக் கலியாண விஷயத்தில் பாடுபட்டும் எல்லாம் தட்டிப் போகுதே என அவருக்குக் கவலைதான். எந்த வகையிலும் ராம நாதனின் மகளின் கலியாணத்தைச் சரியாக்கினால் தனக்கு சுளையாக குறைஞ்சது ஒரு லச்சமாவது கைக்குவரும் என்ற நம் பிக்கையில் அவரும் ஓடித்தான் பார்க்கிறார். காரியம் சாணேற முழம் சறுக்கிற மாதிரி ஆகிவிடுகிறது.

அன்றும் புறோக்கர் பொன்னம்ப லத்திடம் ஒரு மாப்பிள்ளையின் சாதகம் அகப்பட்டு விட்டது. அவருக்கும் ஒரு அளவுக்கு சாதகப் பொருத்தம் பார்க்கத் தெரியும். அந்த அனுபவத்தில் மாதங்கியின் குறிப்பையும் தனக்குக் கிடைத்த மாப்பிள்ளையின் குறிப்பையும் அலசி ஆராய்ந்து மிக திருப்தியான பொருத்தமாகக் கண்டதால் அவசர அவசரமாக ராமநாதன் வீட்டுக்கு வந்து சேர்ந்தார் அவர்.

புறோக்கர் புன்னகைத்தபடி வந்த முகக் குறிப்பிலேயே நல்லதொரு குறிப்பு அகப்பட்டுக் கொண்டதென யூகித்து அறிந்து கொண்ட அவர் "என்ன பொன் னம்பலத்தார், உங்கடை முகத்தைப் பார்த்தால்ஏதோ விஷேஷமாய் தெரியுது" எனக் கதை விட்டார் ராமநாதன்.

"ஓமண்ணை, ஒரு அருமையான சாதகம் கைக்கு வந்திருக்கு. நானும் உங்கடை மகளின்ரை குறிப்போடு பொருத்தம் பாத்தன். வலு சுப்பரான பொருத்தமண்ணை. இந்தாங்கோ மாப்பிள்ளையின்ரை குறிப்பு, நீங்களும் சோதிட ஐயரிட்டை காட்டிப்பாருங்கோ. மாப்பிள்ளை கிளிநொச்சிப் பெடியன். முல்லைத்தீவு நீர்ப்பாசனத் திணைக்களத் திலை ரி.ஏ ஆய் வேலை செய்யிறானாம். வயது உங்கடை மகளை விட ரண்டு வயது மூப்பு. முப்பத்தி மூண்டு. நல்ல பெடியனாம். குடும்பமெல்லாம் கிளி நொச்சியிலை இருக்கினமாம்.

"பிறகென்ண புறோகர் வலு நேர்த்தியா விபரங்களை அறிஞ்சு போட்டீர்." "புறோக்கர் பொன்னம்பலம் என்டா கொக்கா, இப்ப முப்பது நாப்பது வருஷ அனுபவமல்லே"

"அம்மாளாச்சி, உனக்கு பட்டுச்சாத்தி, பாலாபிசேகம் செய்வன். உந்தக் கலியா ணத்தை முடிச்சுவை தாயே" என ராம நாதன் மனைவி யோகம் அதற்கிடையில் நூறு நேர்த்திகட்டிக் கொண்டாள்." "யோகமக்கா கவலைப்படாதேங்கோ, உங்கடை அம்மாளாச்சி இனியும் கைவிட மாட்டாள்." என யோகத்துக்கு ஆறுதல் சொல்லலிய புறோக்கர், உடனை போய் ஐயரிட்டை உங்கடை மனத்திருப்திக்கு பொருத்தம்பாருங்கோ." என்றார்.

"அது சரி புறோக்கர் சாதகம் சரி யெண்டாலும் பெடியன் என்ன சாதிசனமெண்டு தெரியுமே? இவ்வளவு காலம் காத்திருந்த நாங்கள் அதையும் அறிய வேண்டாமே? அதோடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெடியன் குடிக்கிறவனா?, குணநலம் எப்படி எண்டு ஆராய வேண்டாமே?"

"ஓமண்ணை அதுவும் சரிதான். இப்பிடி நுணுக்கம் பாத்தியலெண்டா உங்கடை மகள் குமரா வீட்டுக்கை குந்தியிருக்க வேண்டியது தான். இந்த நாளையிலை குடிக்காத மாப்பிள்ளை தேடுறதெண்டா முயல் கொம்பை தேடிற மாதிரி. படிக்கிற வயதிலேயே பெடியள் பியர் அடிக்க பழகிவிடுகிறாங்கள். நீங்க ளொண்டு குடிக்காத மாப்பிள்ளை தேடினால் அவ்வளவு தான்." என புறோக்கர்பொன்னம்பலம் ராமநாதனுக்கு விடயங்களை விளங்கப்படுத்தி விட்டு, எதுக்கும் உங்கடை திருப்திக்கு உங்களுக்கு கிளிநொச்சியிலை யாரையும் தெரிஞ்சால் சொல்லி விசாரியுங்கோ" என்றதுடன் அந்தச் சாதகக் குறிப்பிற்குரிய மாப்பிள் ளைப் பையனின் படமொன்றையும் அவர்களது பார்வைக்குக் கொடுத்து, " அண்ணை உங்கடை மகளின்ரை கிட்டடியிலை எடுத்த படத்தையும் விசாரிக்கிற ஆக்களிட்டைக் கொடுத்து அதை மாப்பிள்ளை வீட்டுக்கு குடுத்த னுப்புங்கோ. உங்கடை மகள் வடிவானவ ளெண்டபடியால் சில வேளையிலை மாப்பிள்ளைக்குப் புடிச்சிதெண்டா காரி யத்தை கெதியிலை முடிக்கலாம்." என ஆலோசனைகளை வழங்கிவிட்டு புறோக்கர் பொன்னம்பலம் புறப்பட ஆயத்தமாக, ராமநாதன் அவரது கையுக் குள் ஒரு ஆயிரம் ரூபாயைத் திணித்து விடை சொல்லி அனுப்பி வைத்தார்.

*****

"இஞ்சேருங்கோப்பா உங்களோடை ஒண்டா வேலை செய்த சிவலிங்கம் அண்ணை இப்பவும் அன்புவழிபுரத் திலேயே இருக்கிறார்?"

"ஆர் எஸ்.கே.சிவலிங்கமோ?, ஓமோம் அவன் இப்பவும் அங்கதான் இருக்கிறான். நாங்கள் பென்சன் எடுத்தாலும் அவன் என்னை மறக்கேல்லை. வேலை செய்யேக்க என்ரை முதல்தர சினேகிதன் அவன் தானே"

"ஓமப்பா முந்தி அடிக்கடி இங்க வந்து சாப்பிட்டுட்டுத்தானே போறவர். நல்ல ஒரு மனுசன். உங்கடை சிநேகினருக்கிடை யிலை அவரைத் தானே உங்களுக்குப் பிடிக்கும்."

"உண்மை தானப்பா. இப்ப ஆளுக்கு ஏலாதெண்டதாலை வீட்டை வாரேல்லை. எண்டாலும் எங்கை கண்டாலும் பழைய சிநேகிதத்தை மறவாமல் என்னை விசாரிக் கிற நல்ல சிநேகிதன் அவன். எந்தக் காரி யத்தையும் நம்பிக்கையோடை செய்யக் கூடியவன் சிவலிங்கம்."

"பிறகென்ன அந்தச் சிவலிங்கத்தின்ரை மனுசி கிளிநொச்சிதானே?"

"ஓமோம் கிளிநொச்சி இரணைமடுக் குளத்துக்குப் போற றோட்டிலை தான் அவளின்ரை தாய், தகப்பன்ரை வீடு"

"புறோக்கர் தந்த மாப்பிள்ளைப் பொடியன்ரை வீடும் கிளிநொச்சி தானே. அதாலை சிவலிங்கத்திட்டை மாப்பிள் ளைப் பொடியன்ரை விபரங்களைச் சொல்லி விசாரிக்கச் சொல்லுங்கோவன். உங்களுக்கெண்டா மாட்டேண்டமாட் டார் உங்கடை உயிர் சினேகிதன் அப்பி டித்தானே"

"நீ சொல்றது நூத்துக்கு நூறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை. இந்த விசயத்தை சரியா நம்பிக்கையா அவன் எனக்கு விசாரிச்சுச் சொல்லுவா னப்பா"

"அப்ப பேந்தென்ன. ஒரு ஓட்டோ எடுத்துக் கொண்டு போய் சிவலிங்கத்தை உடனை சந்திச்சிட்டு வாங்கோவன். இண்டைக்கு நல்ல நாள். புதன் கிழமை."

"இஞ்சையிருந்து போய்வர ஓட்டோவுக்கு ஆயிரம் ரூபாக்கு மேல வரும்"

"உதுகளை பாத்து என்ன செய்யிறது காசைப்பாத்தா கலியாணம் சரிவருமே"

*****

ராமநாதன் ஒரு ஓட்டோவைப் பிடித்துக்கொண்டு தனது நண்பன் சிவலிங்கம் வீட்டில் போய் இறங்கினார். தனது சிநேகிதன் ராமநாதனைக் கண்ட சிவலிங்கத்துக்கு மகிழ்ச்சி கரை புரண்டோடியது.

காலையில் போன இராமநாதனை, மறித்து மத்தியானம் சாப்பிட்டு விட்டே போக கட்டாயப்படுத்தி நிற்பாட்டிய தோடு, நாலு போத்தில் பியர் எடுத்து இருவரும் குடித்து மகிழ்ந்து, கோழி இறைச்சியுடன் தடல்புடலாக இராமநாத னுக்கு விருந்தும் வைத்தான் சிவலிங்கம்.

போதை ஏறின தருணத்தில்ராமநாதன் "டே சிவலிங்கம் நீ தாண்டா என்ரை உயிர் நண்பன். பாரன் பென்சன் எடுத்து மூண்டு வருஷமாயும் என்ரை சிநேகி தத்தை நீ மறக்கேல்லை." என அரற்றி யபடி தான் வந்த விஷயத்தை சிவலிங் கத்திடம் ஒப்புவித்தார்.

"மச்சான் நீ பயப்பிடாதை. நான் நாளைக்கு காலையிலேயே கிளிநொச்சிக்குப் போறன். உன்ரை மாப்பிள்ளைப் பையனைப் பற்றி அறிஞ்சு விபரத்தை உடனேயே போனிலை சொல்லுறன். நீ யோசிக்காதை மச்சான். உனக்குச் செய்யாத உதவியே" என சிவலிங்கம் ராமநாதனுக்குச் சொல்லி, ராமநாதன் கொண்டு வந்த மாப்பிள்ளைப் பெடியனின் படத்தையும் வாங்கி வைத்துக் கொண்டு ராமநாதனை கட்டித் தழுவி முத்தமிட்டு விடை தந்தான்.

*****

ராமநாதனின் தொலைபேசி ஒலித்தது. அதை எடுத்த ராமநாதன் "ஹலோ ஆர் சிவலிங்கமே.!

"ஓமடா மச்சான் சிவலிங்கம் தான். கிளிநொச்சியிலிருந்து கதைக்கிறன்."

"சொல்லு மச்சான். என்ன மாப் பிள்ளைய, அவங்கடை சாதி சனத்தை விசாரிச்சியோ?"

"பின்னை அதுக்குத் தானே இஞ்சை மினக்கெட்டு வந்தனான். கிளிநொச்சி யிலை உமையாள்புரமாம் மாப்பிள்ளை யின்ரை வீடு. மாப்பிள்ளையின்ரை சொந்தக்காரரும் அங்கைதானாம். ஆனால். ராமு. மாப்பிள்ளைப் பகுதி அவ்வளவு சாதி சரியில்லையாம். தாய் ஒரு சாதியாம், தகப்பன் வேறையாம். நீயோ, நானோ சாதியிலை முதல் நம்பர் குலத்து ஆக்களெல்லே எங்களுக்கு உதெல்லாம் பொருந்தாது ராமநாதன். அதோடை மாப்பிள்ளை பெடியன் இடைக்கிடை சொண்டிலை பூசிக்கொள் ளிற பழக்கமுள்ளவனாம். எண்டாலும், உனக்கு இதெல்லாம் சரிவருமெண்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்ரை மகளுக்கு கட்டி வை எனக்குப் பிரச்சினை இல்லை. உன்ரை மகளின்ரை படத்தை மாப்பிள்ளைப் பெடியனும் பாத்தவன். நல்லா புடிச்சிருக்கு அவனுக்கு. ஆனா அவங்கடை சாதி, பெடியன்ரை சொண்டுப்பூச்சு இதுகளை நீ யோசிச்சு முடிவெடு ராமா" என்றான் சிவலிங்கம்.

வெண்ணை திரண்டு வர தாழி உடைஞ்ச மாதிரி ராமநாதனுக்கும் கவலைதான், என்ன செய்ய முடிவில் அந்தக் கலியாணத்தை செய்து வைக்கிற திலை மனம்விட்டுப்போய் "மச்சான் சிவலிங்கம் நீ என்ரை நண்பன்டா. நீ எனக்கு நன்மைக்குத் தான் எல்லாம் செய்வாய் எண்டு எனக்குத் தெரியும். உன்ரை பேச்சுக்களை இதோடு நிப்பாட் டிட்டு மகளின்ரை படத்தை திருப்பி வாங்கிக்கொண்டு திருகோணமலைக்குத் திரும்பி வா மச்சான்."

என்ற ராமநாதனின் கதையைக் கேட்ட சிவலிங்கம் பேச்சை நிறுத்திவிட்டு வீடு வந்து சேர்ந்தான்.

*****

சுமார் ஒரு கிழமை கழித்து புறோக்கர் பொன்னம்பலம் ராமநாதன் வீட்டுக்கு வந்தார். "என்னண்ணை எல்லாம் விசாரிச்சீங்களோ எல்லாம் சரிதானே?"

"அதையேன் கேக்கிறியள் புறோக்கர். பெடியன் பகுதி அவ்வளவு சாதி சரியில்லையாம். தாய் ஒரு சாதியாம். தகப்பன் வேறையாம். அது மாத்திரமே மாப்பிள்ளையும் தண்ணியடிக்கிறவனாம்."

"ஐயையோ அப்பிடியே.. அப்பிடி யெண்டாலும் நல்ல பொருத்தம். நல்ல வேலை. அதையெல்லாம் உந்தச் சங்கதியள் கெடுத்துப் போட்டுதண்ணை. பறவாயில்லை பொறுத்தனீங்கள் கொஞ் சம் பொறுங்கோ. சாடிக்கேத்த மூடியும் எங்கையும் இருக்கத்தானே வேணும். நான் வேறை சாதம் கொண்டுவந்து தாறன். அது சரி.. ஆரிட்டைச் சொல்லி இதுகளை விசாரிச்சனீங்கள்?"

"அதுவோ என்னோடை வேலை செய்த சினேகிதன் சிவலிங்கம் அன்பு வழிபுரத்திலை இருக்கிறான். அவன்ரை மனிசி கிளிநொச்சிதான். சிலவேளை மாப்பிள்ளைப் பகுதியின்ரை விபரங்கள் அவங்களுக்கு தெரியலாமெண்டு விசாரிச் சுச் சொல்லக் கேட்டனான். புறோக்கர் அந்த சிவலிங்கத்தை உங்களுக்கும் தெரியுமெண்டு நினைக்கிறன். நல்ல நம்பிக்கையான சினேகிதன். அடிக்கடி எங்கடை வீட்டுக்கு வந்து உண்டு குடிச்சிட்டுப் போறவன். அவன விசாரிச்சா விஷயம் சரியாதான் இருக்கும்."

"ஓமண்ணை சிவலிங்கத்தை எனக்கும் தெரியும் ஆனா பெரிசா பழக்கமில்லை. அடிக்கடி உங்கடை வீட்டிலை சிவலிங் கத்தைப் பாத்திருக்கிறன்."

"ஓம் புறோக்கர்.. நீங்கள் குறிப்பைத் தந்த அடுத்த நாளே சிவலிங்கத்தை சந்திச்சனான். அவனும் உடனே தன்ரை வேலை போல் நினைச்சு கிளிநொச்சிக்குப் போய் மாப்பிள்ளை பகுதியை பத்தி அறிஞ்சு உடனை அறிவிச்சிட்டான். அவன்ரை போக்குவரத்துச் செலவை நான் தாரனெண்டன். ஒரு சதமும் அவன் வாங்கேல்லை புறோக்கர். அப்பிடியொரு நண்பன் அவன்."

"இனியென்ன செய்யிறது கவலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படாதேங்கோ அடிமேலை அடி அடிச்சா அம்மியும் நகரத்தானே வேணும். யோசிக்காதேங்கோ நான் ஒருக்கா யாழ்ப்பாணம் போக வேணும் என்ரை மகனின்ரை மூத்தவளின்ரை சாமத்தியச்சடங்குக்கு. வர எப்பிடியும் ரெண்டு கிழமையாகும். வரேக்கை நல்ல குறிப்போடை வருவன் யோசியாதேங்கோ.." எனச் சொல்லி புறப்பட்ட புறோக்கர் பொன்னம்பலத்தின் கையில் ஒரு ஆயிரம் ரூபா நோட்டை திணித்து விடைதந்தார் ராமநாதன்.

*****

யாழ்ப்பாணம் சென்று வந்த புறோக்கர் பொன்னம்பலம் அவசர அவசரமாக ராமநாதனுடைய வீட்டுக்கு வந்தார்.

"வாருங்கோ புறோக்கர் எப்ப யாழ்ப் பாணத்திலையிருந்து வந்தனீங்கள்?"

"நேற்று இரவுதான் வந்தனான். அதுசரி உங்கடை நண்பன் சிவலிங்கத் தின்ரை மகளுக்கு கலியாணம் நடந்ததாம் போனீங்களே?"

"என்ன சிவலிங்கத்தின்ர மகளுக்கு கலியாணமோ?... எனக்கு அவன் சொல்லவே இல்லையே!"

"எப்படி சிவலிங்கம் உங்களுக்கு கலியாணத்துக்குச் சொல்லுவான்?"

"ஏனண்ணை?"

"அவனின்ரை மகளின்ரை மாப்பிள்ளை ஆரெண்டு தெரியுமோ?"

"கலியாண வீட்டுக்கே போகேல்லை. மாப்பிள்ளையைப் பத்தி எனக்கு எப்பிடி புறோக்கர் தெரியும்?"

"நான் சொல்லுறன் கேளுங்கோ. நீங்கள் விசாரிச்சிட்டு வரச்சொன்ன கிளிநொச்சிப் பெடியன் தான் மாப்பிள்ளை."

"என்ன சாதி சரியில்லை.. குடிகாரன் எண்டு அவன் சொன்ன மாப்பிள்ளையோ?"

"உங்கடை நீண்ட காலச் சிநேகிதன் உங்களுக்கே அள்ளிவச்சிட்டான்"

"என்ன சொல்லுறியள்?"

"ஓமண்ணை மாப்பிள்ளை பெடியனை என்ரை மகனுக்கு நல்லா தெரியும். என்ரை மகனோடை யாழ்ப்பாணத்திலை கொஞ்சகாலமா மாப்பிள்ளைப் பெடியன் வேலை செய்தவனாம். பிறகு முல்லைத்தீவு கந்தோருக்கு மாற்றலாகிப் போனவனாம். குடிவெறி இல்லாத நேர்மையான பெடியனாம். தாய் தகப்பன் கூட நல்லாப் படிச்ச நல்ல சாதிக்காரராம். நல்லதொரு சனங்களாம். மகன் சொன்னதைக் கேட்ட எனக்கு தலையே விறைச்சுப்போச்சு தண்ணை. உங்களை இல்லாததை பொல்லாததைச் சொல்லி ஏமாத்தின சிவலிங்கம் அந்த மாப்பிள்ளைப் பெடியனையே தன்ரை மகளுக்கு பேசி கலியாணத்தை வலுரகசியமா உங்களுக்கும் தெரியாமலேயே சட்டுப்புட்டெனச் செய்து போட்டான் அந்த உங்கடை படுபாவிச் சினேகிதன்."

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ராமநாதனும் மனைவி யோகமும் ஐஞ்சும் கெட்டு அறிவுங் கெட்டு திகைத்துப் போய் நின்றனர்.

**மறந்து விடாதீர்கள்!**
**உங்கள் படைப்புகளுடன் உங்கள் வங்கி விபரங்களையும் உங்களைப் பற்றிய சிறுகுறிப்பும் இணைத்துவிடவும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமொன்று நினைக்க

எஸ் ஏ கப்பார்

சலீம்ஹாஜியார் புதிய இடத்திற்கு வந்து நாலைந்து வருடங்களாகின்றன. இதற்கு முன் இதே இடத்தில் சமது ஹாஜியா ருடைய ஒரே மகன் றமீஸ் செல்பேசி மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் கடையொன்றை நடாத்தி வந்தார். வியாபாரம் அவ்வளவு பெரிதாக எதிர்பார்த்தபடி நடைபெறாததால் வருமானம் போதியளவு கிடைக்கவில்லை. அதனால் அக்கடையைக் கைவிட்டு வெளிநாடு சென்றுவிட்டார்.

சமது ஹாஜியார் நல்ல மனிதர். பாவ புண்ணியத்திற்குப் பயந்தவர். உதவி செய்யும் மனப்பான்மையுள்ளவர். மற்றவர்களுக்குத் தான தர்மங்கள் செய்வதிலும் பின்னிற்காதவர். அறுபத்தைந்து வயதிலும் தன்னுடைய வேலைகள் அனைத்தையும் தானே தனியாகச் செய்து கொள்ளுமளவிற்கு திடகாத்திரமானவர். தன் மனைவியுடன் மூத்த மகளின் வீட்டில் தான் வசித்து வருகிறார். மருமகன் இரண்டொரு தெரு கடந்து சொந்தமாக ஒரு பலசரக்குக் கடை நடாத்தி வருகிறார். நேர்மையானவர்.

சலீம் ஹாஜியாரும் சமது ஹாஜியாரும் ஒரு வகையில் தூரத்து உறவினர்கள். ஒரு நாள் பள்ளிவாசலில் சந்தித்து இருவரும் உரையாடியபோது முதலில் சலீம் ஹாஜியார்தான் நேரடியாக விடயத்திற்கு வந்தார்.

"பூட்டிக்கிடக்கிற உங்க மகன்ட கடையிலே என்ட சில்லறைக் கடையை கொண்டுவந்து நடத்தலாமென்று நினைக்கிறேன். மாதா மாதம் வாடகையைக் கறக்டா தந்திடுவேன். நீங்க சம்மதிச்சா சரிதான்."

"இப்ப கடை இருக்கிற இடமும் நல்ல இடம்தானே."

உரையாடலைத் தொடர சமது ஹாஜியார் வினவினார்.

"இல்ல ஹாஜி. இப்ப அவடத்தில சனப் புழக்கம் குறைவு. வியாபாரமும் போதாது"

சலீம் ஹாஜியார் ரொம்ப கறாரான மனிதர் என்பதால் சமது ஹாஜியார் சிறிது யோசித்துவிட்டு,

"மகனிடமும் ஒரு வார்த்தை கேட்டுவிட்டு சொல்றேன்" என்றார்.

இரண்டொரு வாரங்களில் சமது ஹாஜியாரின் மகனிடமிருந்து அனுமதி கிடைத்ததும் சலீம் ஹாஜியார் தனது சில்லறைக் கடையை இடம்மாற்றி விட்டார். திறப்பு விழாவும் ஒரு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

சலீம் ஹாஜியார் கடை திறந்து ஒரிரு வாரங்களில் கொரனாவின் தாக்கம் உலகை ஆட்டிப்படைத்தது. நமது நாடும் அதற்கு விதிவிலக்கில்லை. ஆரம்பத்தில் சலீம் ஹாஜியார் கவலைப்பட்டாலும் நாட்கள் செல்லச் செல்ல கொரனாவின் அதிகரிப்பு அவருக்கு அதிஸ்டத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவந்தது.

பொருட்களின் விலைகள் கிடுகிடு வென ஏறியதும் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதும் பொருட்களைக் கூடுதலான விலைக்கு விற்பதற்கு ஒரு வாய்ப்பாகப் போய்விட்டது சலீம் ஹாஜியாருக்கு. கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்த நினைத்தவர், தான் விரும்பியவாறு விலைகளைக்கூட்டி தனது வியாபாரத்தை வளப்படுத்தினார். நல்ல வருமானமும் கிடைத்தது.

அதைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி சலீம் ஹாஜியாரை மேலும் மேலும் அதிஸ்ட சாலியாக்கியது. தெய்வம் கூரையைப் பிய்த்துக்கொண்டு கொடுப்பதாக எண்ணி மகிழ்ந்தார். பொருட்களின் விலைகள் இரண்டு மூன்று மடங்குகளாக உயர்ந்த போது சலீம் ஹாஜியாரின் காட்டில் நல்ல மழை பெய்யத் தொடங்கியது.

இந்த அதிஸ்டம் சலீம் ஹாஜி யாருக்கு நீண்டகாலம் நீடிக்கவில்லை.

தொடர்ந்து மக்களிடையே ஏற்பட்ட மனமாற்றங்களும் தொழில் இல்லாப் பிரச்சினைகளும் சலீம் ஹாஜியாரின் வியாபாரத்தில் ஓரளவு தளர்வை ஏற்படுத்தியது என்னவோ உண்மைதான். ஹாஜியாரின் கடையில் பொருட்களுக்குக் கூடுதலான விலை எனவும் வேண்டுமென்றே பொருட்களைப் பதுக்கிவைத்து விற்கிறார் எனவும் மக்கள் பேசிக் கொண்டனர்.

ஒரு நாள் சமது ஹாஜியார் வழமை போல் சாமான்கள் வாங்க கடைக்கு வந்தார்.

"என்ன சலீம் ஹாஜியார், வியாபாரம் எல்லாம் நல்லா போகுதுதானே? நம்மட சாயிவுத் தம்பிட மகன் றசாக் வெளிநாட்டிலிருந்து வந்திருக்கான். நானும் போய் பார்த்தேன். நல்ல வசதியோடதான் வந்திருக்கான் போல தெரியுது. அவனும் அவன்ட மாமாட கடையில பெரிய சில்லறைக் கடைதான் போடப்போறானாம். இனி வெளிநாடு போய் உழைச்சது போதும் என்கிறான்."

சமது ஹாஜியார் சொன்னதைக் கேட்டதும் சலீம் ஹாஜியாருக்கு என்னவோ போலாகிவிட்டது. நமது தொழிலுக்குப் போட்டியாக ஒருவன் முளைத்துவிட்டான் என நினைத்துக் கவலைப்பட்டவர், தொடர்ந்து

"முன்னையப் போல இப்ப வெல்லாம் வியாபாரம் இல்லை ஹாஜி. நானும் நல்லா உழைச்சதான். இப்ப சனங்களுக்கிட்ட காசு இல்ல. லாபமும் மிகக் குறைவு. விட்டுட்டு வேற ஏதாவது தொழிலைச் செய்யச் சொல்லுங்க."

"கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேணும்தானே. அவனுக்கு அமைச்சது அவனுக்கு. நமக்கு அமைச்சது நமக்கு"

பதிலளித்துவிட்டு எழுந்து தான் வாங்க வந்த பொருட்களை வாங்கிக் கொண்டு சென்றார், சமது ஹாஜியார்.

இரண்டு மூன்று வாரங்களில் புதிய கடை வெகு விமர்சையாகத் திறக்கப்பட்டது. சலீம் ஹாஜியாரும் திறப்பு விழாவிற்குச் சென்று வந்தார்.

மாதங்கள் பல சென்றன. சலீம் ஹாஜியாரின் கடைக்கு வாடிக்கையாளர்களின் வருகை படிப்படியாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறையத் தொடங்கியது. தனது வாடிக்கையாளர்களில் பெரும்பாலானோர் புதுக் கடையில் பொருட்கள் வாங்குவதைக் காணும் போதெல்லாம் வயிறு பற்றியெரிந்தது.

கவலையும் குடிகொண்டது. வருமானமும் வெகுவாகக் குறைந்துவிட்டது. நோயும் தொற்றிக்கொண்டது. பார்ப்பவர்களெல்லாம் சலீம் ஹாஜியாரிடம் நலம் விசாரிக்கத் தொடங்கிவிட்டனர்.

கடந்த இரண்டு மூன்று நாட்களாக சலீம் ஹாஜியாரின் கடை பூட்டிக் கிடந்ததை அவதானித்த றசாக் தனது கடைக்கு வந்தவர்களிடம் விசாரித்ததில் சலீம் ஹாஜியாருக்குச் சில நாட்களாகச் சுகமில்லை என அறிந்துகொண்டான். கடையினை அடைத்ததும் அவரது வீட்டுக்குப் போய் பார்த்துவர வேண்டுமென எண்ணிக்கொண்டான்.

இரவு ஒன்பது மணியளவில் கடையைப் பூட்டிவிட்டு சலீம் ஹாஜியாரின் வீட்டையடைந்து 'ஹாஜியார்... ஹாஜியார்..." என கூப்பிட்டபடி கதவைத் தட்டினான். கதவு பூட்டப்பட்டிருந்தது. மீண்டும் 'நான் றசாக் வந்திருக்கேன்" என சத்தமிட்டான். உள்ளேயிருந்து அவரது மனைவி வந்து கதவைத் திறந்து வரும்படி அழைத்ததும் அவரது மனைவியின் பின்னால் றசாக் சென்று அமர்ந்தான்.

இரண்டொரு வருடங்களுக்குள் புதிதாக கட்டிய மாடி வீடு. கீழ்பகுதி மட்டும் பூரணப்படுத்தப்பட்டிருந்தது. மேற்பகுதியின் வேலைகள் ஆரம்ப நிலையில் காணப்பட்டன. வீடு அழகாகவும் அமைதியாகவும் இருந்தது.

'ஹாஜியாரைப் பார்க்கத்தான் வந்தனான்."

அமைதியைக் கலைக்க எண்ணி ஆரம்பித்தான்.

"ரெண்டு மூணு நாளா அவங்களுக்கு நெஞ்சு நோவு. ஆஸ்பத்திரிக்குப் போங்க எண்டு சொன்னேன். பாப்பம் பாப்பம் எண்டு இருந்தாங்க. பின்னேரம் நோவு அதிகமா இருக்கெண்டு சொல்லிக் கொண்டிருந்தாங்க. அவங்கள பாக்கவந்த நம்மட சமது ஹாஜியார்தான் கட்டாயப் படுத்தி ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக்கொண்டு வாட்டில வச்சிருக்காங்க. நானும் மகளும் இப்பதான் சாப்பாடு கொண்டு குடுத்திட்டு வந்திருக்கோம். நானும் மகளும் தனியே இருக்கதாலேதான் கதவைப்பூட்டி வைச்சிருக்கோம்."

சலீம் ஹாஜியாரின் மனைவி மிக வேதனையோடு கூறினார்.

"இஞ்ச பாருங்க தம்பி. மூணு நாலு வருக்ஷமா நல்ல வியாபாரம்தான். ஒன்றையும் செய்றதுக்கு நம்மட ஊர் உடமாட்டா. எல்லாரும் எல்லாத்தையும் செய்யணுமெண்டா எப்படி? நூல் கடை போட்டா எல்லாரும் நூல் கடைதான். நகைக்கடை போட்டா எல்லாரும் நகைக் கடைதான். சில்லறைக் கடை போட்டா எல்லாரும் சில்லறைக் கடைதான். அதாலதான் ஒருவரும் ஒண்டும் செய்ய ஏலாது."

றசாக்கிற்கு பொறியில் தட்டியது போல் இருந்தது.

"நாங்களும் எப்படியோ வீட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிச்சு மகளுக்கு ஒரு கலியாணத்த பண்ணிடலாமென்டுதான் நினைச்சோம். நாம் ஒண்ணு நினைக்க படைச்சவன் ஒண்ணு நினைக்கான்"

பெருமூச்சுடன் றசாக்கை நிமிர்ந்து பார்த்த சலீம் ஹாஜியாரின் மனைவியின் முகத்தை அவனால் ஏறிட்டுப்பார்க்க இயலவில்லை.

தான் வெளிநாடு சென்று திரும்பி வந்து ஒரு நிரந்தரத் தொழிலைச் செய்ய வேண்டுமென நினைத்தபோது தனது உறவினர்களினதும் நண்பர்களினதும் ஆலோசனைப்படிதான் றசாக் சில்லறைக் கடையொன்றை ஆரம்பித்தான். இது சலீம் ஹாஜியாரின் குடும்பத்தைப் பாதிக் குமென்று நினைக்கவில்லை. அப்படி யாயின் வேறு ஒரு கடையை ஆரம்பித் திருக்கலாம் என எண்ணி வேதனைப் பட்டான். ஹாஜியாருக்கு எப்படியும் உதவ வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கியது. நாளை வைத்தியசாலை சென்று சலீம் ஹாஜியாரைப் பார்த்து அவரது வைத்தியச் செலவுகளுக்கு உதவுவதோடு அவரது வங்குரோத்து நிலைக்குச் சென்ற வியாபாரத்தினையும் கட்டியெழுப்ப உதவ வேண்டுமென உறுதிகொண்டான்.

"உம்மா, இந்தாங்க ரீ "

மறைவிலிருந்து தேனீர் தட்டை நீட்டிய மகளிடமிருந்து தேனீரைப் பெற்று றசாக்கிடம் வழங்கினார், ஹாஜியாரின் மனைவி.

குழம்பிப்போயிருந்த றசாக் தேனீ ரைப் பெற்று அருந்திவிட்டு,

"நீங்க ஒன்றுக்கும் பயப்பட வேணாம். நான் காலைல கடை திறக்கிற துக்கு முன் ஆஸ்பத்திரி போய் ஹாஜி யாரைப் பார்த்து வாரேன். வருத்தத்தைப் பற்றி கவலைப்பட வேணாம். கொழும் புக்குக் கூட்டிப்போய் செக் பண்ணுவம். கடையையும் திறக்கச் சொல்றேன். என்ன உதவி எண்டாலும் செய்றேன். நீங்களும் எங்கட வாப்பாவோட சொந்தம்தான்."

குற்ற உணர்வோடு விடைபெற்றுக் கொண்டு வெளியேறிய றசாக் எப்படியும் நாளை வைத்தியசாலை சென்று ஹாஜியாரைப் பார்த்து அவரை தைரியப் படுத்த வேண்டுமென்ற நல்லெண்ணத் துடன் வீட்டையடைந்தான்.

அடுத்த நாள் அதிகாலை எழுந்து ஆஸ்பத்திரிக்குச் சென்று ஹாஜியாரைப் பார்த்துவிட்டு கடையைத் திறக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் வீதிக்கு வந்தான் றசாக்.

"தம்பி, நம்மட சலீம் ஹாஜியார் ஆஸ்பத்திரியில மௌத்தாகிட்டாராமே. இன்னும் வீட்டுக்கு கொண்டு வரல்ல யாம்."

பக்கத்து வீட்டு மாமா சொல்லி விட்டு நகர்ந்தார்.

மரணச் செய்தி கேட்ட றசாக் செய்வதறியாது விக்கித்துப்போய் சிலையாக நின்றான்.

**மறந்து விடாதீர்கள்!**
**உங்கள் படைப்புகளுடன் உங்கள் வங்கி விபரங்களையும் உங்களைப் பற்றிய சிறுகுறிப்பும் இணைத்துவிடவும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயமான கேள்வி!

இப் புவியிலுள்ள ஒவ்வொரு விடயத்திற்கும் ஒரு யாகமோ அல்லது ஒரு பூசையோ இருந்தது. உங்களுக்குத் தொழு நோயோ அல்லது சளிக்காயச்சலோ இருந்தால் அது குணமாவதற்காக நீங்கள் ஒரு பிரத்யேகப் பூசை செய்யக் கூடிய கடவுள் இருந்தார். பூசையின் மூலம் நீங்கள் அவரை மகிழ்விக்கவேண்டும். உங்களை நச்சரிக்கும் உங்கள் மனைவி, உங்களுக்குத் தொந்தரவு கொடுக்கின்ற உங்கள் அண்டைவீட்டுக்காரன் ஒருவனோடு ஓடிப் போகவேண்டும் என்று நீங்கள் விரும்பினால் அதற்கும் ஒரு பூசை இருந்தது. உங்கள் பசுவிற்கு ஒரு கன்றோ அல்லது உங்களுக்கு ஒரு மகனோ பிறக்கவேண்டும் என்று நீங்கள் விரும்பினால், ஒரு பிராமணன் உங்களுக்கு உதவுவான். அவன் ஒரு பூசையை நடத்தினால் , ஒரு தெய்வீகக் கன்று பிறக்கலாம் அல்லது ஒரு மகன் பிறக்கலாம். எனக்குள்ள பிரச்சனை என்னவென்றால் நம் தலைகளிலுள்ள பாவ எண்ணங்கள் அனைத்தையும் களைகின்ற ஒரு பூசையை இந்தப் பிராமணர்களால் ஏன் நடத்த முடியவில்லை? என்பதே.

**ஆனந் நீலகண்டன்**

---

**இதழ் 33 இல் அச்சுப்பிழை காரணமாக 8 ஆம் பக்கத்தில் வந்த மஞ்சம் கதையின் சிலவரிகள் காணாமல் போயவிட்டன.அவை கீழே தரப்பட்டுள்ளன**

......அந்த இரவை மட்டும் அல்ல அடுத்து வந்த நாட்களையும் தின்று விட்டது.அம்மா சொன்னது ஞாபகம் வந் தது. வரும் மஞ்சம் நாள் என்வாழ்விலும் மறக்க முடியாத நாளாகவும் இருக்கும் போல.

A. KUGAN
72, 2nd LANE
ANANDAPURI
TRINCO

**இதழ் 33 இல் அச்சுப்பிழை காரணமாக 15 ஆம் பக்கத்தில் வந்த பெண்ணின் பெருமை கதையின் சிலவரிகள் காணாமல் போய்விட்டன. அவை கீழே தரப்பட்டுள்ளன**

.....இந்த சந்தோசமான நேரத்தில் நீ பாடுவியே கல்லூரியில் படிக்கும்போது ஜேசுதாஸ் பாடிய பாரதியின் பாடல் அதை பாடு என்று எல்லோரும் கரகோஷம் செய்ய தெளிந்த மனதுடன் ஆனந்தமாக தன் மனைவியின் கையைப்பற்றி " வீணையடி நீ எனக்கு மேவும் விரல் நான் உனக்கு என்ற பாடலை இனிமை யாக பாட" சவீதாவே நிமிர்ந்த நடை நேர்கொண்ட பார்வை யோடு எல்லோருக்கும் குளிர்பானம் கொண்டு வர உள்ளே போனாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுகதை எழுதுவது எப்படி?

மு. தயாளன்

## சிறுகதையில் உரையாடல்

சிறுகதைகளில் உரையாடல் வருவது எனக்கு மிகவும் பிடிக்கும். முழுக் கதையையுமே உரையாடலால் அமைப்பதில் மிக விருப்பம் கொண்டவன் நான். நான் ஆரம்பத்தில் சிறுகதை எழுதுவதற்கு உரையாடல் பாவிக்க முடியாதவனாகவே இருந்தேன். உரையாடல் மூலம் கதை எழுதுவதென்பது மிகக் கடினமான ஒன்று என்றே கருதியிருந்தேன். நான் முதன் முதல் என் பாடப் புத்தகத்தில் வந்த **ஓம் நான் சொல்கிறேன்** என்ற சிறுகதையையே படித்திருந்தேன். அந்தக் கதைதான் என்னை எழுதத் தூண்டியது. இந்தக் கதையை நீங்களும் படித்திருப்பீர்கள். உரையாடல்களோடு அமைந்த கதை இது.

சிறுகதை எழுதும்போது இப்போதெல்லாம் உரையாடலுக்கு முக்கியத்துவம் கொடுப்பது என் வழக்கம்.

பல நண்பர்கள் இந்த உரையாடல் பற்றி கேட்டிருக்கிறார்கள். உரையாடல் சிறுகதைக்கு அவசியமா ? என்று. அப்போதெல்லாம் அவர்களின் எதிர்பார்ப்பு நான் தேவையில்லை என்று சொல்வேன் என்பதே. ஏனென்றால் நான் முன்பு பயந்ததுபோல் அவர்களுக்கும் உரையாடல் எழுதப் பயம். உண்மையைப் பேசினால் ஒரு சிறுகதையை எழுதுவதற்கு கட்டாயம் உரையாடல் தேவையில்லை.

கருப்பொருளைப் பொறுத்து நீங்கள் முடிவு செய்யலாம். பல கதைகள் உரையாடல் இல்லாமலே வெற்றியடைந்திருக்கின்றன. ஆனால் உரையாடல்களால் கதை நகருமாயின் மிகச் சிறப்பாக இருக்கும்.

நீங்கள் தெரிவு செய்யும் பாத்திரத்தினோடு நெருக்கமாக ஒன்றிவிட்டால் உரையாடலைத் துணைக்கு அழைக்க வேண்டிய அவசியமில்லை.

சிறுகதை எழுத்தில் ஒரு வகையான ஒருவர்மட்டுமே பேசும் நீண்ட பேச்சாகக் கதை அமைதல் (monologue). நீங்கள் உருவாக்கும் பாத்திரம் வாசகர்களோடு நேரடியாகப் பேசும் உத்தி. இந்த உத்தியில் உரையாடலின் தரம் வாசகர்களை நன்கு வசப்படுத்தும்.

நான் இப்படி ஒரு கதை எழுதினேன். அதன் விபரங்களை அடுத்த இதழில் தந்து அதுபற்றிய விளக்கங்களை ஆராய்வோம்.

(இன்னும் வரும்..)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LUXMI EDUCATION CENTRE
# LEC

## ENROLLING NOW
2022 / 2023

REGISTER NOW



www.leconline.co.uk

0208 573 0368

07852 810 285

## WHAT WE OFFER

**01.**
KS1 & KS2
Maths
English
Science

**02.**
KS3 & KS4
Maths, Physics
Chemistry,
Biology
Maths

**03.**
KS5
Puremaths
Mechanics
Statistics
Physics
Chemistry

Luxmi Education Centre, 101A Blyth Road, Hayes, UB3 1DB.
Web: www.leconline.co.uk Tel: 0208 573 0368

LEC Digital Designs

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






அற்புதமான அழகுமிகு
வடிவங்களில் குறைந்த
விலையில்
நிறைந்த சேவையினைத் தருவது
வெஸ்டேர்ண் ஜுவல்லர்ஸ்.

# WESTERN
JEWELLERS

Wembley Branch:
5, Plaza Parade, 29-33 Ealing Road,
Wembley, HA0 4YA

SPECIALISED IN 22ct GOLD,
WHITE GOLD, PLATINUM &
DIAMOND JEWELLERY

Tooting Branch:
230 Upper Tooting Road
London, SW17 7EW

## SILK EMPORIUM

122 Upper Tooting Road
London, SW17 7EN

FIRST JEWELLERY SHOP IN UK

WWW.WESTERNJEWELLERS.COM
TEL : 020 8903 0909

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org